15-1-55

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை



2 அ

ஜனவரி 14உ முதல்

சென்னை

வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி

மூன்று தியேட்டர்களிலும்

மற்றும்

பெங்களூர்
மதுரை
கோயமுத்தூர்
மைசூர்
திருநெல்வேலி
தஞ்சாவூர்
கும்பகோணம்
ஈரோடு
திண்டுக்கல்
காஞ்சீபுரம்
திருப்பாபுலியூர்
புதுச்சேரி
பொள்ளாச்சி
கரூர்
தென்காசி
போடிநாயக்கனூர்
ராஜபாளையம்
நாகர்கோயில்
ராபர்ட்சன்பேட்டை
சாமராஜ் நகர்

ஜெமினி

ஔவையார்

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 6 **இதழ்: 2**

15 - 1 - '55

குழந்தைகளே பக்கம்	2
கண்ணன் உறவு ..	3
போட்டோ க்விஸ் ..	4
லீடர் மணி ..	6
பாரஸீக ரோஜா ..	11
ஆவி எழுதியது ..	13
வெள்ளி மூக்கு ..	17
பாலர் கவி அரங்கம் ..	19
சைக்கிள் பரிசு ..	20
ரமணியின் அதிருஷ்டம் ..	23
கேளுங்கள், சொல்கிறேன்	26
சந்திரகிரிக்கோட்டை ..	29
ஜோஸ்யர் நரியார் ..	33
பொங்கலோ பொங்கல் ..	37
எங்கள் பகுதி ..	39

செய்திகள் - மூன்றும் அட்டை

அட்டைப்படம்:
என். ராமகிருஷ்ண

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

21795

அருமையான சம்பவம்

"டேய்! நாளைக்கு உங்களைச் சோதிப்பதற்கு இன்ஸ்பெக்டர் வருகிறார். நாளைக்கு யாராவது ஞாபக மறதியாகப் புஸ்தகங்களை வீட்டில் விட்டுவிட்டு வந்தீர்களானால் உங்கள் முதுகுத் தோலை உரித்துவிடுவேன்; ஜாக்கிரதை!" என்று சற்றுக் கடுமையாய் மாணவர்களை எச்சரித்தார் உபாத்தியாயர்.

மறு நாள் காலை—

மாணவர்கள் எல்லாரும் பள்ளிக்கூட மணி அடித்ததும் தங்கள் வகுப்பிற்குள் சென்று தங்கள் இடங்களில் அமர்ந்தனர். இன்ஸ்பெக்டர் முன் அறிவித்தபடியே வகுப்புக்கு வந்தார். உபாத்தியார் அவரைக் கை குலுக்கி வரவேற்றார். மாணவர்கள் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். இன்ஸ்பெக்டர் மாணவர்களைச் சில கேள்விகளைக் கேட்டார். பின்பு, முன் பெஞ்சியிலிருந்த கிட்டுவைச் சுட்டிக்காட்டி, சரித்திர புத்தகத்திலுள்ள முதலாம் அத்தியாயத்தை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். கிட்டு சற்றுத் திகிலடைந்தவனாய்த் 'திரு திரு'வென்று விழித்தான். உபாத்தியாயருக்கு விஷயம் விளங்கவில்லை. அவர் கண்கள் கோபத்தினால் கனலைக் கக்கிற்று. பளிச்சென்று எழுந்து, பல்லை நறநற வென்று கடித்து, கிட்டுவின் கன்னத்தை நிமிண்டிய வாறு, "எங்கேடா மடையா புஸ்தகம்?" என்று அதட்டினார். "உங்கள் கையில் இருக்கிறது என் புஸ்தகம்தானே ஸார்! நீங்கதானே சற்று முன்பு என்னிடமிருந்து வாங்கிக்கொண்டீர்கள்" என்று மென்று விழுங்கியவாறு சொன்னான் கிட்டு. இன்ஸ்பெக்டர் உள்பட எல்லா மாணவர்களும் 'கொல்' லென்று சிரித்துவிட்டார்கள், உபாத்தியாயர் வெட்கத்தினால் தலை குனிந்தார்.

—க. சுந்தரமூர்த்தி,
தெல்லிப்பழை, இலங்கை.

21795
... 600 008

குழந்தைகளே!

மங்களகரமான இந்தப் பொங்கல் நாளில் என் இருதய பூர்வமான பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொங்கல் நன்னாளை முன்னிட்டு நமது கவிஞர் ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஓர் அருமையான பாடலை எழுதியுதவியிருக்கிறார்கள். பாடப் பாடத் தெவிட்டாத அந்தப் பாடலைப் பாடிப் பாடிக் களிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த இதழில் புதிய சித்திரத் தொடர்கதையான பாரஸீக ரோஜா ஆரம்பமாகிறது. படங்கள் வழக்கத்தைவிடக் கொஞ்சம் பெரிதாக இருப்பதைக் கவனியுங்கள். சுவாரஸ்யம் மிகுந்த இந்தக் கதை ஸாமியின் அழகான சித்திரங்களுடன் சேர்ந்து உங்களுக்கு மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறேன்.

வழக்கமான பல கதைகளுடன் இந்த இதழில் பொங்கலைப் பற்றிய ஒரு கட்டுரையும் வெளியாகிறது. போட்டோ க்விஸ், பாலர் கவி அரங்கம், கேளுங்கள் சொல்கிறேன், எங்கள் பகுதி முதலிய பல பகுதிகளும் வெளியாகியிருக்கின்றன. எல்லாவற்றையும் படித்துப் பார்த்துவிட்டு உங்கள் அபிப்பிராயங்களை 'எங்கள் பகுதி'யில் எழுதித் தள்ளுங்கள். அடுத்த இதழிலிருந்து இந்தப் பகுதியை இன்னும் கொஞ்சம் அதிகமாக வெளியிடலாம் என்று எண்ணுகிறேன். இது உங்கள் கடிதங்களைப் பொறுத்திருக்கிறது. தாராளமாக எழுதுங்கள்.

'அதிருஷ்டக் குழந்தைகள்' என்ற விளம்பரத்தைப் பார்த்துவிட்டுப் பல புதிய சந்தாதார்கள் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் அதன் விவரங்களைக் கேட்டு எழுதியிருக்கிறார்கள். இந்த வருஷம் ஜனவரி மாதம் 31-ஆம் தேதி முடிய எவ்வளவு பேர் நேரிட கண்ணனுக்குச் சந்தா அனுப்பியிருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுடைய சந்தா எண்ணையும் எடுத்துக் குறித்துக் கொள்வோம். பிறகு அந்த எண்களைக் குலுக்கிப் போட்டு மொத்தம் பத்து எண்களை எடுப்போம். முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுகள், நான்காம் பரிசுகள் என்று தேர்ந்தெடுத்து அந்தக் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். அந்த மாதிரி அதிருஷ்டக் குழந்தைகளில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். அதனால் இதுவரையில் நீங்கள் சந்தாதாராக இல்லாமல் இருந்தால் உடனே சேர்ந்துவிடும்படிக் கூற விரும்புகிறேன்.

கடைசி அட்டையில் ஒரு விளம்பரம் இருக்கிறது. இது பல குழந்தைகளுக்குப் புரியவில்லை. இது உங்களுக்காக மட்டும் இல்லை; உங்கள் பெற்றோர்கள், உறவினர்கள் இதைப் பார்த்துவிட்டு உங்கள்பேரில் அன்புடன் சந்தா கட்டலாம். நீங்களே உங்கள் சகோதரனுக்கோ சகோதரிக்கோ நண்பர்களுக்கோ சந்தா கட்டலாம். பொங்கல் சமயத்தில் கட்டுகிற இந்தச் சந்தா பொங்கல் பரிசு ஆகும் அல்லவா?

சென்ற வருஷம்போல் இந்த வருஷமும் குழந்தைகளுக்கான புத்தகங்களைப் பரிசுப் பாக்கெட்டுகளாக வைத்திருக்கிறோம். இது காங்கிரஸ் கண் காட்சியிலுள்ள எங்கள் ஸ்டாலிலும் (நம்பர் 172) கிடைக்கும். காரியாலயத்துக்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

—ஆசிரியர்.

கண்ணன் உறவு



கவிஞர் வே. ராமலிங்கம் பிள்ளை

பொங்கல் மிகப்பெரிய திருநாள் - தூசு
போக்கிப் புதுமைதர வருநாள்.
எங்கும் மிகுந்தகளி யாட்டம் - பல
எருதுப் பந்தயங்கள் ஓட்டம்.
அங்கும் பசுமாட்டின் கூட்டம் - அந்த
ஆயன் கண்ணன் நினை வூட்டும்.
எங்கள் தமிழ்போலும் இனிக்கும் - அவன்
இசைக்கும் குழலோசை நினைக்க
கன்னங் கருநீலக் கண்ணன் - இன்று
காட்சிக் கினிமைமிகும் வண்ணன்
மின்னும் புதுநிறங்கள் பூண்டு - புவி
மெச்சும் கட்டழகில் நீண்டு
சின்னஞ் சிறியஎங்கள் உள்ளம் - அவன்
சிங்காரம் கண்டுகளி துள்ள
முன்னம் எங்களிடம் வந்தான் - துயர்
முற்றும் நீக்கிநலம் தந்தான்.
புத்தம் புதியஉடை தரித்து - எழில்
பொங்கும் மலர்மணங்கள் விரித்து
சித்தம் வியக்கஒளி வீசி - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி
மெத்தப் படித்தவரும் கேட்டு - பயன்
மேவும் மெய்யறிவு கூட்டும்
தித்திக்கும் கீதங்கள் பாடி - வந்த
தெய்வக் கண்ணனிடம் ஓடி
கண்ணன் அறிவுரைகள் கேட்டோம் - ஒரு
காலும் சோர்ந்திருக்க மாட்டோம்.
பண்ணும் எந்த ஒரு செயலும் - சுய
பாசம் அற்றிருக்க முயலும்
எண்ணம் மிகத்தெளிவு கொண்டோம் - அவன்
என்றும் பணிபுரியக் கண்டோம்.
திண்ணம் கண்ணனுடை உறவால் - நாம்
தீரர் சிறப்புகளைப் பெறுவோம்.

போட்டோ



1. எந்த ஊர் ஸந்நிதி?
கும்பகோணம்
ராமேசுவரம்
திருவையாறு



2. எந்த ஊர் மலைக் கோயில்?
சுவாமி மலை
திருப்பதி
பழனி



3. இந்தக் கோயில் எங்கே உள்ளது?
டில்லியிலுள்ள பிர்லா மந்திர்
பூரி ஜகந்நாதர் ஆலயம்



4. எந்த ஊர் மாதா கோயில்?
மைசூர் செயிண்ட் பிலோமினு
வேளாங்கண்ணி
திருச்சிராப்பள்ளி

என். ராமகிருஷ்ணு

க் வி ஸ்

5. இந்தப் பூச்சியின் பெயர் என்ன?
   விட்டில் பூச்சி
   பட்டுப் பூச்சி
   வண்ணாத்திப் பூச்சி

6. இது எதனுடைய பூ?
   கத்தாழை
   கல் வாழை
   வெங்காயம்



7. இது என்ன?
   பேரிச்சங் குலை
   பனங் குரும்பை
   தென்னங் குரும்பை

7. இது என்ன?
   கடல் நுரை
   சிந்திய பால்
   மழைத் தண்ணீர்

விடைகள்: 40-ஆம் பக்கம்

எழும்பூர் ஸ்டேஷனை முதல் முதல் பார்த்த மணி பூலோகமோ, கைலாசமோ என்று ஆச்சரியப்பட்டான். ஆனால் அதே சமயத்தில் அவனுக்குப் பெருத்த ஏமாற்றமாகவும் இருந்தது. கங்கன் வர்ணித்தபடி அங்கே ஒன்றையும் காணோம். விமானங்கள், கப்பல்கள் எல்லாம் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே இருக்கும் என்று அவன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான்.

ஸ்டேஷன் ஜகஜ்ஜோதியாய் இருந்தது. எத்தனை வண்டிகள்! எத்தனைக் கூட்டம்! அடேயப்பா!

அவன் எதிர்பார்த்ததுபோல் கங்கனுக்கு, சென்னையைப் பற்றி அவ்வளவாக ஒன்றும் தெரியவில்லை. அவனும் இவனைப்போலவே ஒவ்வொன்றையும் வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டே நின்றான். திறந்த வாய் திறந்தபடி மின்சார ரெயிலையும், விசாலமான நீண்ட பிளாட்பாரத்தையும், அங்கே பக்கத்தில் வரிசையாக வந்து நின்ற மோட்டார்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

காலை நேரமானதால் ஒரு வண்டிக்குப் பின்னால் மற்றொரு வண்டியாக வந்துகொண்டேயிருந்தன. கூட்டமும் இருந்துகொண்டேயிருந்தது. ரெயிலில் வந்த ஜனங்களும் அவர்களை அழைத்துப் போக வந்திருந்தவர்களுமாக 'ஜே ஜே' என்று இருந்தது பிளாட்பாரம். இந்தக் கூட்டத்தின் நடுவே அகப்பட்டுக்கொண்டு மணியும் கங்கனும் ஸ்டேஷனை விட்டு வெளியிலே வந்து சேர்ந்தார்கள். அப்பா, சித்தி இவர்களின் பார்வையில் படாமல் வெளியில் வந்தோமே என்று மணி மனசுக்குள் திருப்திப்பட்டான். ஆனால் அவனுடைய திருப்தியெல்லாம் அவனுடைய பெருத்த ஏமாற்றத்துக்குள் அடங்கிவிட்டது.

எத்தனை பெரிய ஏமாற்றம்! 'போலீஸ்காரர்கள் எல்லாம் சல்யூட் போடுவார்கள்' என்றானே கங்கன். மணி ரொம்ப ஜம்பமாக ஒரு போலீஸ்காரனுக்கு எதிராகப் போய் அநேகமாக அவன் மேலேயே போய் முட்டிக்கொண்டான். மரியாதையாகச் சல்யூட் அடிக்கவேண்டிய போலீஸ்காரன், மீசையை நீட்டிக்கொண்டு விழிகளை ஓர் உருட்டு உருட்டி விழித்துப் பார்த்துவிட்டு, ''டேய், சின்னப் பையா! என்ன உங்க பாட்டன் வீட்டு ரோடு என்ற நினைப்போ? போ, போ ஓரமாய்!'' என்று கர்ஜனை செய்வதுபோல் உறுமினான்.

மணி மிகப் பரிதாபமாகக் கங்கனைப் பார்த்தான். கங்கன் என்ன செய்வான், பாவம்! சிறு பையன்களுக்கு மரியாதை காட்ட வேண்டியவர்கள் மரியாதை காட்டா

விட்டால் அவன்தான் என்ன செய்யமுடியும்?

தெருவின் ஓரங்களிலே பிச்சைக்காரர்களும் அவர்களுடைய குடும்பங்களும் வசிப்பதைக் கண்ட மணிக்கு இன்னும் விசித்திரமாக இருந்தது. அவன் வயதுப் பையன்கள் சிலர் பஸ் ஸ்டாண்டைச் சுற்றிக்கொண்டு, ''ஐயா, ஸாமி, அம்மா, தாயே!'' என்று பிச்சை கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்தார்கள்.

'அட பாவமே! இந்தப் பையன்களுக்கெல்லாம்தான் இந்த ஊரில் பல சங்கங்களும் சதனங்களும் இருக்கின்றன என்று கங்கன் சொன்னானே, இவர்கள் அங்கே போகக்கூடாதா? இப்படி ஏன் பிச்சை எடுக்கவேண்டும்! கட்டிக்கொள்ளக்கூட நல்ல ஆடைகள் இல்லாமல் இப்படிக் குளிரில் நிற்கிறார்களே! இவர்களுக்காக யாருமே இரக்கமும் படுவதாகத் தெரியவில்லையே!' என்று எண்ணினான் மணி.

மணியும் கங்கனும் எந்தப் பஸ்ஸில் ஏறுவது, எங்கே போவது என்று தெரியாமல் நின்றார்கள். கங்கனைப் பார்க்கப் பார்க்க மணியின் சந்தேகங்கள் எல்லாம் மிகவும் அதிகரித்துக்கொண்டே போயின. அவன் ராத்திரி வர்ணித்த சென்னைக்கும் இப்போது அவன் பார்க்கிற சென்னைக்கும் எத்தனை வித்தியாசமிருந்தது!

''இப்போ எல்லாம் மாறியிருக்குடா!'' என்று கங்கன் தப்பித்துக்கொள்ள ஏதோ சமாதானம் சொன்னான்.

ஆனால் மணி அவன் சொன்னதை அப்படியே நம்பத் தயாராக இல்லை.

''சரி; இப்போது நாம்ப இரண்டு பேரும் எங்கேடா போகவேண்டும்? அதோ மவுண்டு ரோடு என்று பஸ் வருகிறதே, அதில் போகலாமா? இல்லே திருவல்லிக்கேணிக்கோ பாரிஸ் கார்னருக்கோ போகலாமா?'' என்று கேட்டான் மணி.

''மவுண்டு ரோடு போனால்தான் தேவலே. ஆனால் எனக்கு எப்படிப் போகிறது என்று மறந்துபோயிடுத்துடா! அங்கே போனால் ஞாபகம் வருமோ என்னவோ!'' என்றான் கங்கன். இன்னும் அவன் புளுகுவதை நிறுத்தவில்லை; மணிக்கு இவன் பெரிய 'டூப்' விடுகிறான் என்றுதான் அவன் பேசும்போதெல்லாம் தோன்றியது. ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளலாமா?

அவன் என்ன சொன்னாலும் சரி சரி என்று மணி தலையை ஆட்டிக் கொண்டு வந்தான். இருந்தாலும் இவனுடைய சகவாசம் பெரிய ஆபத்துத்தான் என்று அவனுக்குப் பட்டது. எதற்கும் அவசரப்படக் கூடாது என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

காலை வேளையில் பசி வயிற்றைப் பிடுங்கியது. எனவே இருவரும் மவுண்டு ரோடு பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள். பஸ் கண்டக்டரோ டிரைவரோ அவர்களை வந்து அப்படியே கட்டிக்கொள்ள வில்லை. அதற்குப் பதிலாகச் சிறு பையன்களை அந்தக் கண்டக்டர் முடிந்தமட்டும் ஆடுமாடுகளை விரட்டுவதுபோல் விரட்டினான். ''எடு காசை! எங்கே போகணும்?'' என்று அதட்டினான்.

மணி கையில் இருந்த எட்டணாவை எடுத்துக் கொடுத்து, ''இந்தப் பஸ் எங்கே போகிறது?'' என்றான்.

எல்லாரும் இவர்களையே பார்த்துச் சிரித்தார்கள்.

''உனக்கு எங்கே போகணும்?'' என்றான் கண்டக்டர்.

மணி கங்கனைப் பார்த்தான். கங்கன் செவிடன் மாதிரி ஒரு மூலையில் போய் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்புறம் எப்படியோ இரண்டணா கொடுத்து மவுண்டு ரோடுக்கு இரண்டு டிக்கட் வாங்கிக்கொண்டான் மணி.

வண்டி போய் நின்றதும் எல்லாரும் இறங்கிப் போனார்கள். இவர்கள் இரண்டுபேர் மட்டும் அதுதான் மவுண்டு ரோடு என்பது தெரியாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

கண்டக்டருக்குச் சிரிப்பாகவும் பரிகாசமாகவும் இருந்தது. ''தம்பிகளா! இதுதான் மவுண்டுரோடு!'' என்றான்.

அதற்கப்புறம்தான் அவர்கள் பஸ்ஸைவிட்டுக் கீழே இறங்கினார்கள். இறங்கி அந்த இடத்தைப் பார்த்தபோது அவர்களுக்குத் திக்குத் திசைபுரியவில்லை. ஜனங்கள் இங்கும் அங்கும் போயக்கொண்டிருந்தார்கள். மோட்டார்களும் சைக்கிள்களும் பஸ்களும் சாரி சாரியாகக் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டே யிருந்தன. அசந்தால் போச்சு! எந்த வண்டி யாவது மோதித் தள்ளிவிடும் என்பது நிச்சயம்!

மணிக்கு இருந்த பிரமிப்பில் பேச்சே எழும்பவில்லை. எதைப் பார்த்தாலும் திகைப்பாக இருந்தது.

''எங்கேடா இனிமேல் போறது? எனக்கு முதல்லே பசிக்கிறதுடா?'' என்றான் மணி.

''வா, ஹோட்டலுக்குப் போகலாம்'' என்று கங்கன் மணியை ஓர் உடுப்பி ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போனான். ஹோட்டல் என்றால் அது சாதாரணமாகவா இருந்தது! ஒரே சமயத்தில் ஆயிரம்பேர்போல் உட்கார்ந்து சாப்பிட்டார்கள்.

''மெட்ராஸ் சொர்க்கலோகம் போல இருக்குடா!'' என்றான் மணி.

வெளியில் வந்து எந்த இடத்துக்குப் போவது என்று தெரியாமல் இருவரும் தென்கிழக்குத் திசையாக நடந்து திருவல்லிக்கேணிப் பக்கம் போனார்கள். சர்க்கார் காரியாலயங்களையும் கிரிக்கெட் மைதானத்தையும் தாண்டியதுமே ஒரே நீலப் பரப்பாகக் கடல் தெரிந்தது. மணி இதுவரையில் சமுத்திரத்தைப் பார்த்ததே யில்லை. கங்கன் பார்த்திருப்பதாகச் சொன்னானே தவிர அவனும் உண்மையில் பார்த்ததில்லை. உருண்டு உருண்டு வரும் வெண் அலைகளைப் பார்த்துவிட்டு இருவரும் துள்ளித் துள்ளிக் குதித்தார்கள்.

''டேய் சமுத்திரம்டா!'' என்றான் கங்கன்.

''ஆமாண்டா!'' என்றான் மணி.

''சுத்தப் பட்டிக்காடு மாதிரிக் கத்தாதேடா!''

மணிக்கு உடனே ரோசத்துடன் கோபம் வந்தது. 'இவன் மட்டும் ரொம்பப் பட்டணத்து மனுஷனோ?' என்று மனத்தில் எண்ணிக் கொண்டான்; கேட்கவில்லை.

ஒவ்வொரு விஷயத்திலும் கங்கன் சொன்னது எல்லாம் பொய் என்பது தெரிந்தது. அவன் சும்மா அளந்துவிட்டிருக்கிறான்

என்பதும் தெரிந்தது. ஆனாலும் மணிக்கு அவனை எதிர்த்து ஒன்றும் கேட்க முடியவில்லை. மெல்ல மெல்ல அவன் சொல்படியெல்லாம் கேட்டு நடக்கும் அளவுக்குப் பணி வாக மாறி வந்தான்.

ஏதாவது சந்தேகம் என்று கேட்டால் கங்கன், "சும்மா இருடா! நான் சொல்வதைக் கேளுடா!" என்று அதட்டினான்.

மணிக்கு வேறு வழியில்லை. கங்கன் பொய்யனோ, புரட்டனோ அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டு சும்மா இராவிட்டால் அவன் கோபித்துக் கொண்டு போய்விடுவான்! அப்படிப் போய் விட்டால் இவ்வளவு பெரிய பட்டணத்தில் அவன் மட்டும் ஒண்டியாக எங்கே போவது, என்ன செய்வது? அதையும் தவிர இன்னும் ஒரு விஷயம் மட்டும் மணிக்கு நம்பிக்கையாகவே இருந் தது. ஏதோ குழந்தைகளுக்காகச் சங்கம், கழகம் என்று இருக் கின்றன என்று சொன்னானே கங்கன்; அதில்மட்டும் நம்பிக்கை இருந்தது. மெதுவாக அங்கே போய்ச் சேர்ந்துவிட்டால் அப் புறம் கவலை இல்லை. அப்புறம் இந்தக் கங்கனை லட்சியம் செய்ய வேண்டியதில்லை. அதுவரையில் வாயையும் கையையும் அடக்கிக் கொண்டு இருக்க வேண்டியதுதான் என்று மணி தீர்மானித்துக் கொண்டான்.

வெகுநேரம் கடல் மணலிலும் கடல் ஜலத்திலும் நின்று கிளிஞ்சல் கள் பொறுக்கினார்கள். இரண்டு கால் பைகளும் நிரம்பிவிட்டன. வெயில் கடுமையாகக் கொளுத்தத் தொடங்கியது. நெற்றியெல்லாம் ஒரே வேர்வை! தூரத்தில் புகை தெரியும் கப்பல்கள் நிற்பது தெரிந்தது. படகுகள் கரையை விட்டு மீன் பிடிக்கச் செல்வது பார்க்க வேடிக்கையாக இருந்தது.

இப்படி வெகு நேரம் பொழுதைப் போக்கிவிட்டுக் களைத்துப் போய் மரீனு பீச்சுப் பக்கம் வந்தார்கள். அங்கே இருந்த மேடையில் களைத்துப்போய் இருவரும் அமர்ந்து கொண்டார்கள். மணிக்குத் தன் நண்பனிடம் கோபம் கோபமாக வந்தது. 'இப்படி ஒரே புளுகாகப் புளுகி, தன்னையும் நம்பச் செய்து, மோசம் செய்துவிட்டானே இந்தப் பயல்' என்று சொல்லமுடியாத வருத்தமாக இருந்தது. அந்த வருத்தத்தை மனசில் வைத்துக் கொண்டு, கங்கனிடம் பேசவே பிடிக்கவில்லை அவனுக்கு.

அன்று முழுவதும் செலவுக்குக் கையில் காசு இருந்தது. பசித்த போது சாப்பிட்டார்கள். பசிக்காத போதும் ஏதாவது நொறுக்குத் தீனி வாங்கித் தின்ருர்கள்.

''கையிலே காசு குறையறதுடா! அதுக்குள்ளே ஏதாவது ஒரு சங்கத்திலே போய்ச் சேர்ந்துடணும்டா!'' என்று கெஞ்சாத குறையாகச் சொன்ஞன் மணி.

''அதைத்தாண்டா நானும் தேடிக் கொண்டிருக்கேன். முந்தி பார்த்தது மறந்து போச்சுடா!'' என்ருன் கங்கன்.

''உனக்குத் தெரிஞ்சவர் இருக்கார் என்று சொன்னியே! அவர் விலாசம் எங்கே? அவர் உன்னைப் பார்த்தால் அடையாளம் தெரிஞ்சுப்பாரோ?''

''அடையாளம் தெரிஞ்சிப் பாரோவா? அப்படியே நம்பளைக் கண்டதும் தூக்கிண்டுடுவார்டா! பையன்கள் என்ருல் அவருக்கு அத்தனை ஆசை. அவரைப் பார்க்கிற மட்டும்தான் நமக்குச் செலவு. பார்த்துவிட்டால் அப்புறம் நமக்கு எதுக்குக் காசு?'' என்ருன் கங்கன்.

மணி இப்போது கொஞ்சம் துணிந்து, ''டேய், இப்பவாவது உள்ளதைச் சொல்லு. இப்போ எங்கிட்டே ரெண்டு ரூபாயும் சில்லறையும் இருக்கு. நான் ஊருக்காவது திரும்பிப் போயிடுவேன். அப்புறம் பணமும் செலவழிஞ்சு போயிட்டா நாம்ப எங்கேடா போய் நிக்கிறது?'' என்ருன்.

''நான் பொய்யாடா சொல்கிறேன்? என்னை நம்பித்தான் நீ வந்தியோ?'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு கங்கன் பெரிய சண்டையே பிடிக்க ஆரம்பித்துவிட்டான்.

இரவில் படுக்கக் கூட இடம் கிடைக்காமல் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொண்டார்கள். அந்தத் திண்ணையில் அவர்கள் படுத்துத் தூங்கிய கதையே தனிக் கதைதான். அவ்வளவு கஷ்டப் பட்டுப் போனுர்கள். மறு நாள் முழுவதும் கால்போனபடி யெல்லாம் நடந்து சுற்றிஞர்கள். சங்கத்தையும் காணேம்; சமாஜத்தையும் காணேம்! பைகளில் வைத்திருந்த கிளிஞ்சல்கள் கனம் வேறே. அதை மணி ஆத்திரத்துடன் வெளியில் எடுத்து எறிந்தான்.

நாலாம் நாள் அன்று, காலையில் இட்டிலி தின்றதோடு சரி; அப்புறம் கையில் காலணு இல்லை. அன்று சாயங்காலம் வரையில் மணிக்கு அழுகை அழுகையாக வந்தது. பசியும் களைப்பும் அவனைப் போட்டு வாட்டின. கங்கனுடைய கையிலும் காசு இல்லை. இருவருமாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்னையின் தெருக்களிலே அலைந்து திரிந்தார்கள். சாயங்காலம் பீச்சுப் பக்கமாவது போவோம் என்று வரும்போது அங்கே ஒரு மைதானம் இருந்தது. அந்த மைதானத்தில் சிலர் புட்பால் விளையாடிக்கொண் டிருந்தார்கள். அதை வேடிக்கையாவது சிறிது நேரம் பார்க்கலாம் என்று இருவரும் அங்கே போய் நின்ருர்கள்.

(தொடரும்)

பாரஸீக ரோஜா
முன்னொரு காலத்தில் பாக்தாத் பட்டணத்தில் ஷா ஜாமன் என்னொரு மாமன்னர் இருந்தார். அவரைக் கலீபா என்று மற்ற மன்னர்கள் கப்பம் கட்டி வந்தார்கள். அவருக்கு வெகு நாள் சென்றபின் காமர் என்று ஒரு மகன் பிறந்தான்...
காமர் பதினாறு வயதடைந்தபின் ஒரு நாள் கலீபா பிரதான மந்திரியை அழைத்து....
மந்திரி! நம் செல்வக்குமாரனுக்குப் பட்டம் சூட்ட விரும்புகிறேன். உம் யோசனை என்ன?
சர்வ வல்லமை படைத்த அல்லாவின் தவப்புதல்வரே! ஆனால் அதற்குமுன் நம் முறைப்படி அவருக்கு மணம் ஆக வேண்டுமே!
மகனே! எனக்கு முதுமை வந்துவிட்டது. இனி நீ தான் இந்த ராஜ்யபாரத்தை ஏற்க வேண்டும். அதற்கு முதல்படியாக உனக்குப் பிடித்த பெண்ணை நீ தேர்ந்தெடு.
அன்பு மிக்க தந்தையே! இந்த ஒரு விஷயத்தில் மட்டும் மன்னிக்க வேண்டும். மேலோர் நூல்களை படித்து வரும் நானிப் போது மணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லையே!
அருமை மகனே, அவசரம் இல்லை. ஓராண்டு பொறுத்து உன் சம்மதத்தைச் சொல்லலாம்.
ஓராண்டும் கழிந்தது. காமர் திருமணம் செய்து கொள்வதில் விருப்பம் இல்லாமலே இருந்தான். ராணியும் கலீபாவும் மிக்க வருந்தினார்கள். கலீபா தன் முதல் மந்திரியை அழைத்து...
கலீபா அவர்களே! நாம் தனியே கேட்பதை விட ராஜ சபையில் கேட்பது நல்லது. இளவரசர் சபையை அவமதிக்க மாட்டார்.
மந்திரி! சரி நீர் நாளையே சபையைக் கூட்டும்! பார்ப்போம்!
மகனே! இன்று இந்த சபை முன் உன் திருமணத்தைப் பற்றிச் சொல்!

இளவரசர் காமர் சம்மதித்து விடுவார் போல் இருக்கிறதே!
ஆமாம் கரும்பு தின்னக் கூலி கேட்பது உண்டோ!
தந்தையே! சிரம் வணங்குகிறேன். திருமணத்துக்கு மட்டும் நான் தகுதியானவன் இல்லே! தாங்கள் மன்னிக்க வேண்டும்!
ஹா! அற்பப் பதரே! என்ன சொன்னாய்? இவனைப்பாழடைந்த கோட்டைச்சிறையில் கொண்டு தள்ளுங்கள்!
காமர் சிறையில் சதாகாலமும்....
அல்லாவே!! உம் சித்தப்படியே யாவும் நடக்கும். அது எனக்குச்சம்மதம்.
மந்திரி! உன்யோசனைக்கு இது தானா பலன்? என் கண்மணி காமருக்குச் சிறையில் எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும். தெரிந்ததா?
தங்கள் சித்தம் ஆயிரம் பணியாளர்கள் மன்னர் குமாரனைக் கவனிக்க இருக்கிறார்கள்!
தொடரும்.

ஆவி எழுதியது!

ஜோதிர்லதா கிரிஜா

ராமானுஜம் பார்வைக்கு அசல் வெள்ளைக்காரப் பையன் மாதிரியேதான் இருப்பான். கருணைக் கிழங்கின் தோலை உரித்தால் உள்ளே செவசெவ என்று இருக்குமே, அந்த நிறம். சாம்பல் நிறப் பூனைக் கண்கள். தகதகவென்று மின்னும் தங்க நிறச் செம்பட்டைத் தலைமயிர். சென்னையில் ஓர் ஆங்கிலோ இந்தியருக்குச் சொந்தமான பங்களாவில், இரண்டு ஆங்கிலக் குடும்பங்களுடன் ராமானுஜத்தின் வீட்டாரும் சேர்ந்து வாடகைக்கு வசித்து வந்ததால், அவன் வீட்டில் குஞ்சு முதல் கிழடு வரை மளமளவென்று சரளமான நடையில் 'வெள்ளைக்காரன் பேச்சு கெட்டது கேடு' என்று சொல்லும்படி அவ்வளவு நன்றாக ஆங்கிலம் பேசுவார்கள்.

அவன் வீட்டில், ராமானுஜத்தைத் தவிர, மற்றவர்களெல்லாம் 'தமிழர்கள் இவர்கள்' என்று எளிதாகச் சொல்லும்படிதான் இருப்பார்கள். ராமானுஜத்தை மட்டும் யாரும் தமிழ்ப் பையன் என்று லேசில் நம்பமாட்டார்கள்.

ஒரு நாள் கடைத்தெரு வழியே அவன் போய்க்கொண்டிருந்த போது ஒரு பெரிய கட்டிடத்து வாசலில் ஏழெட்டுப் பேர் கூடியிருந்ததைக் கண்டான். தற்செயலாக அந்த வீட்டு வாசலிலிருந்து அவனை நோக்கி வந்த ஒருவனை, "எதற்காக அங்கே அவ்வளவு கூட்டம்? கசமுசவென்று அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள்?" என்று வினவினான்.

"அதுவா? அந்தப் பங்களாவுக்கு இங்கிலீஷ்காரர் ஒருவர் வந்திருக்கிறார். மந்திர தந்திர வித்தைகளில் அவர் கைதேர்ந்தவராம். இறந்துபோனவர்களை எல்லாம் பேசவைக்கிறார். அதாவது வாயால் பேச அல்ல! பேனாவால் எழுதச் செய்கிறார். சில வெள்ளைக்காரர்கள் அவரைச் சந்தித்துத் தங்கள் உறவினர், நண்பர்களின் ஆவிகள் எழுதுவதையெல்லாம் படித்துவிட்டுப் போனார்கள். இன்னும் சிலர் உள்ளே அவரோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். வாசலில் கூடி இருக்கும் இன்னும் சிலர் போய்ப் பார்க்கலாமா, வேண்டாமா என்று தயங்கிக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

ராமானுஜத்துக்கு ஆவி, காற்று, புகை இவற்றிலெல்லாம் கடுகளவும் நம்பிக்கை கிடையாது. 'இந்த மாதிரி மூட நம்பிக்கையுள்ள மக்கள் ஏராளமாக இருப்பதனால்தானே, இந்த வெள்ளைக்காரனைப் போன்ற மொல்லமாறிகள் பணம் சம்பாதித்து வயிறு வளர்க்க முடிகிறது? இருக்கட்டும். இவனுடைய புரட்டுத்தனத்தை வெட்டவெளிச்சமாக்குகிறேன்' என்று ராமானுஜம் மெள்ள அந்தக் கட்டிடத்தை நெருங்கினான். வாசலில் அவனுக்குத் தெரிந்த மூன்று நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ராமானுஜத்தைக் கண்டதும், "என்னடா ராமானுஜம். நீ கூட ஆவி எழுதுவதைப் பார்க்க வந்துவிட்டாயா?" என்றார்கள். ராமானுஜம், "உஷ்! பேசாமலிருங்கள். என் பெயர் தற்போது ராபர்ட், இந்த வெள்ளைக்காரனுடைய புரட்டை வெளிப்படுத்துகிறேன், பாருங்கள். நான் தமிழன் என்பது தப்பித் தவறிக்கூட அந்த வெள்ளைக்கார மந்திரவாதிக்குத் தெரிய வேண்டாம். வேடிக்கையைப் பாருங்கள்!" என்று சொல்லிவிட்டு, கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அவன் வெள்ளையனின் புரட்டை எப்படி அம்பலப்படுத்தப் போகிறான் என்பதைப் பார்க்கும் ஆவலுடன், வாசல் பக்கம் நின்று

கொண்டிருந்தவர்களும் ராமானுஜத்தைப் பின்தொடர்ந்து உள்ளே போனார்கள்.

முன்னணியில் நின்றுகொண்டிருந்த ராமானுஜத்தை, ''வா, தம்பி!'' என்று ஆங்கிலத்தில் வரவேற்ற வெள்ளைக்காரன், பின்னால் வந்துகொண்டிருந்த தமிழர்களைக் கண்டதும், ''வாருங்கள், வாருங்கள்?'' என்று தமிழிலேயே அழகாக வரவேற்புக் கூறி, எல்லாரையும் அமரச் செய்தான்.

வெள்ளைக்காரன் ஒருவன் அவனருகிலே நின்றுகொண்டிருந்தான். இறந்துபோன தன் தாத்தாவை எழுதவைக்க வேண்டுமென்று அவன் வேண்டிக்கொண்டான். உடனே வெள்ளைக்கார மந்திரவாதி, ''உங்கள் தாத்தாவுக்கு என்னென்ன பிடிக்கும்? அவர் இறந்து எத்தனை நாளாகிறது? அவர் என்ன உத்தியோகத்திலிருந்தார்? சாவதற்கு முன் தம் சொத்தையெல்லாம் யார் யாருக்கு எழுதி வைத்தார்? அவருக்கு எத்தனை பிள்ளைகள்?'' என்று கேட்டான்.

ஆவி எழுதுவதைப் பார்க்க வந்த வெள்ளையனும் அந்த கேள்விகளுக்குரிய பதிலைச் சொன்னான். ''எங்கள் தாத்தாவுக்குத் தக்காளி சூப்பும் பிஸ்கட்டும் ரொம்பவும் பிடிக்கும். அவர் இறந்து மூன்று மாதங்களாகின்றன. அவர் வருமானவரி உத்தியோகஸ்தர். சாவதற்கு முன்னால் தம் சொத்துக்களையெல்லாம் தம் பிள்ளை, பெண்களுக்குச் சமமாகப் பங்கிட்டு உயிலெழுதினார். அவருக்கு என் தந்தையையும் சேர்த்து இரண்டே பிள்ளைகள்.''

மேற்கண்ட பதில்களை மனத்தில் வாங்கிக்கொண்ட பிறகு அந்த மந்திரவாதி தன் விலையுயர்ந்த பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டு எதிரில் இருந்த காகிதத்தில் எதையோ கிறுக்கத் தொடங்கினான். அப்படிக் கிறுக்கியபோது அவன் இமைகள் மூடியிருந்தன. வாய் முணுமுணுவென்று என்னவோ முணு முணுத்தது.

கொஞ்ச நேரம் அதே நிலையில் அசையாது உட்கார்ந்து கொண்டிருந்துவிட்டு, மந்திரவாதி, தான் எழுதி முடித்த தாளை அந்த வெள்ளைக்காரனின் கையில் கொடுத்தான். அதை அவன் மளமளவென்று மனசுக்குள் படிக்கலானான். ஆவலால் தூண்டப்பட்ட ராமானுஜம், அதில் என்ன எழுதியிருந்ததென்பதைப் படிப்பதற்காக அவனுக்குப் பின்னால் போய் நின்றுகொண்டு எழும்பிப் பார்த்தான். அதில் வெள்ளைக்காரனுடைய பாட்டனின் ஆவி பின் கண்டவாறு எழுதியிருந்தது:

''என் அன்புள்ள பேரனே! உன்னை, உன் அப்பா அம்மாவை, மற்றுமுள்ள எல்லோரையும் நான் தினந்தோறும் கவனித்துக்கொண்டேதான் இருக்கிறேன். உன் அப்பாவைத் தன் உடல் நிலையைப் பத்திரமாகக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லு. என் உயில்படி, உன் அப்பாவும் சித்தப்பாவும் நான் வைத்துச் சென்ற சொத்துக்களைச் சமமாகப் பிரித்துக்கொண்டதைப்பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி, தக்காளி சூப் பென்றால் எனக்கு ரொம்ப உயிர் என்பது உனக்குத் தெரியும். நாளைக்கு சூப் வைத்து, என்னைப் போல நாலு கிழவர்களுக்கு விருந்துச் சாப்பாடு போடு. நானே உன் வீட்டுக்கு வந்து குடித்ததைப் போன்ற மகிழ்ச்சியடைவேன், எப்போதும் உன் நினைவாகவே இருந்து வருகிறேன்.''

அடுத்தபடியாக ஒரு தமிழர் மந்திரவாதியிடம் தன் மாமாவை எழுத வைக்கும்படி கேட்டுக் கொண்டார். அவருக்குத் தமிழ் ஒன்றுதான் எழுதப் படிக்கத் தெரியுமென்பதை அவரிடமே கேட்டு அறிந்துகொண்ட மந்திரவாதி, மறைந்துபோன மாமாவைப் பற்றிய சில கேள்விகளைக் கேட்டு முன்போலவே வெள்ளைக்காகிதத்தில் என்னவோ எழுதத் தொடங்கினார். அவருடைய கண்கள் மூடியிருந்தன; வாய் எதையோ முணு முணுத்துக்கொண்டிருந்தது.

மந்திரவாதியின் கையைக் கண்ணுக்குத் தெரியாத மாமாவின் ஆவி பிடித்து எதையோ எழுதுவித்தது. அசல் தமிழ் எழுத்துக்

கள்! அதைப் படித்த ராமானுஜம், ''உங்களுக்கு எல்லா மொழிகளும் தெரியுமா?'' என்று கேட்டான் மந்திரவாதியை நோக்கி.

''எட்டு மொழிகள் மட்டுமே தெரியும்'' என்று அவரும் ஆங்கிலத்தில் பதில் கூறினர்.

''வங்காளி தெரியுமா?''

''தெரியாது.''

''அப்படியானுல், வங்காளிக்காரர்களுடைய உறவினர்களின் ஆவிகளை உங்களால் எழுதவைக்க முடியாதா?''

''முடியாது.''

''ரொம்ப சரி; நான் ஓர் ஆங்கிலச் சிறுவன், என் பெயர் ராபர்ட். எனக்கு ஒரு பாட்டி இருந்தாள். அவள் சுமார் எட்டு மாதங்களுக்கு முன்னல் இருதயக் கோளாறுல் திடீரென்று இறந்து போனுள். அவளுடைய ஆவியுடன் எழுத்துத் தொடர்பு கொள்ளவே நான் இப்போது இவ்விடத்துக்கு வந்திருக்கிறேன்.''

''அப்படியா, ரொம்ப மகிழ்ச்சி, உன் பாட்டியைப்பற்றிக் கொஞ்சம் விவரமாகத் தெரிவித்தாயானுல் நல்லது.''

''ஆகா! கொஞ்சம் என்ன? ரொம்பவே தெரிவிக்கிறேனே! எங்கள் பாட்டிக்கு வெங்காயக் குழம்பு என்றுலே மூச்சுக் காற்று மாதிரி. எங்கள் பாட்டிக்கு எங்களைக் கண்டாலே பிடிக்காது. அதுவும் எங்கள் அம்மாவாகிய தன் மருமகள்மேல் அவளுக்கு எல்லை கடந்த வெறுப்பு உண்டு. அவள் சாகும்போது எங்களுக்கு எந்தவிதமான சொத்தும் வைத்துவிட்டுச் செல்லவில்லை. எப்போதும் எங்கள் அப்பாவிடம் அம்மாவைப்பற்றிக் கோள் சொல்லிக்கொண்டிருப்பாள். அவள் போனதைப் பற்றி எங்கள் வீட்டில் எல்லாரும் இரண்டு சொட்

உனக்குத் தெரியுமா?

கோபாலன் தன்னுடைய தாத்தாவைப் பார்த்து, ''நீங்கள் எந்த வருஷம் பிறந்தீர்கள்? என்று கேட்டான்,

''நான் பிறந்த வருஷத்தை ஒரு காகிதத்தில் எழுதி அதைத் தலை கீழாகத் திருப்பிப் பார்த்தாலும் அதே வருஷமாகத்தான் இருக்கும், எங்கே நான் எந்த வருஷம் பிறந்தேன் என்று கண்டு பிடி, பார்க்கலாம்!'' என்றார் தாத்தா,

கோபாலன் கண்டுபிடித்த வருஷம் எதுவென்று உங்களால் சொல்ல முடியுமா?

விடை: 40-ஆம் பக்கம்

டுக் கண்ணீர் கடனுக்காக வடித்தோம். அவள் யமனுலகில் இருக்கும்போதும் எங்கள் அம்மாவைத் திட்டிக்கொண் டிருக்கிறாளா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு போவதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறேன்.''

மந்திரவாதி ஏதும் சொல்லாமல், மௌனமாகத் தம் கையில் பேனாவை எடுத்துக் கொண்டார். மெதுவாகக் கண்களை மூடிக் கொண்டே எதையோ முணு முணுக்கலானார். சில விநாடிகளுக்கெல்லாம் அவருடைய பேனா கிறு கிறுவென்று வெள்ளைத்தாளின் மேல் வழுக்கிக் கொண்டு போயிற்று.

எழுதி முடித்தவுடன், தாளை ராபர்ட் என்ற ராமானுஜத்தின் கையிலே கொடுத்தார். ராமானுஜம் கேலிச் சிரிப்பு நெளிந்தோடும் இதழுடன் அந்தத் தாளை வாங்கிப் படித்துப் பார்த்தான்.

இன்னும் ஒரு பல்கூட விழாமல், குண்டு மாதிரி கிண்டாக இருக்கும் தன் பாட்டி ஆவியாக வந்து எழுதியிருந்த கூற்றை எண்ணி அவனுக்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு வந்தது. ஆனா, ஆவன்னா கூடப் படிக்கத் தெரியாத அவனுடைய அழகான பாட்டி முத்து முத்தாக ஆங்கிலத்திலல்லவா எழுதியிருந்தாள்! வெங்காய வாடையைக்கூட வேம்பாக வெறுக்கும் அவனுடைய 'மடி'ப்பாட்டி வெங்காயக் குழம்பு வைத்துத் தனக்குப் படைக்கும்படி எழுதிக் கேட்டிருந்தாள். தான் உயிருடன் இருந்த நாட்களில் குழந்தைகளையும், மருமகளையும் கரித்துக் கொட்டியதற்காக இப்போது மேலுலகத்தில் மிகவும் வருந்துவதாக எழுதி மன்னிப்புக் கோரியிருந்தாள்.

ராமானுஜம் கடிதத்தைப் படித்து அதன் பொருளை அங்கிருந்த தன் நண்பர்களுக்கு விளக்கிச் சொன்னான். பிறகு அந்த ஆவிகளை எழுதவைக்கும் மந்திரவாதியை நோக்கி, ''ஐயா, வெள்ளைக்கார துரையவர்களே! எங்கள் பாட்டி இன்னும் சாகவில்லை. நீங்கள் எழுதியிருப்பதை அவளிடம் போய்ச் சொன்னால் உமது காதைப் பிய்த்துவிடுவாள். தமிழில்கூட ஓர் எழுத்து எழுதத் தெரியாத எங்கள் பாட்டியை ஆங்கிலத்திலல்லவா எழுதப் பண்ணியிருக்கிறீர்கள்? பேஷ்! உங்கள் பித்தலாட்டத்தை இந்த நிமிஷமே போலீஸுக்குத் தெரிவிக்கிறேன், பாருங்கள்! என் பெயர் ராபர்ட் இல்லை, ஐயா! ராமானுஜம். நான் தமிழன்! பார்வைக்கு வெள்ளைக்காரப் பையன் மாதிரி நான் தோன்றுவதால் நான் சொன்னதையெல்லாம் நம்பிவிட்டீர்கள்!'' என்று பொழிந்து தள்ளினான்.

அடுத்த விநாடியே அந்த வெள்ளைக்கார துரை என்னென்னவோ முனகிக் கொண்டே தன் மூட்டை முடிச்சுக்களோடு மரியாதையாக ரெயிலேறினான்—போலீஸ் வருவதற்கு முன்னால்தான்!

வெள்ளி மூக்கு

டி. ராஜகோபால்

அண்ணாமலை சுத்தத் தத்தாரி. சேலத்திலிருந்து பெற்றோர்கள் அவனுக்குக் கல்தா கொடுத்தார்கள். அவன் நாமமலையின் அடிவாரத்தில் போய்த்தான் பல்டி அடித்தான். மலைமேல் ஒரு மடம் இருந்தது. ஒரு சாமியார் அதில் இருந்தார். அவரிடம் போய் அண்ணாமலை வேலைக்கு அமர்ந்தான். மடத்திற்குப் பக்கத்தில் ஒரு மகானுடைய சமாதி இருந்தது. அந்தச் சமாதியை வணங்கினவர்கள் பிணிகளிலிருந்து விடுபடுகிறார்கள் என்ற வதந்தி எங்கும் இருந்தது. அநேகர் அங்கே வந்து சமாதியை வணங்கி, சாமியாருக்குக் காணிக்கைகள் செலுத்தி, விபூதி வாங்கிச் சென்றார்கள். சாமியார் பாடு யோகம்தான். ஏராளமாகப் பணம் சேர்ந்தது.

சாமியார் செய்த புண்ணியமோ அல்லது அண்ணாமலை செய்த பாக்கியமோ, அவனுடைய தத்தாரிக் குணங்கள் மறைந்து அவன் நம்பிக்கையான ஆளாக மாறினான். அந்த மடத்தில் ஒரு கழுதை இருந்தது. எல்லாரும் பசு, ஆடு என்று வளர்ப்பதுபோல் சாமியார் இதை வளர்க்கிறார்போல் இருக்கிறது என்று அண்ணாமலை அதற்கும் சிசுருஷை செய்தான். சாமியாரின் அபிமானத்தையும் பெற்றான்.

இப்படிச் சில வருஷங்கள் சென்றபின் ஒரு சமயம் அண்ணாமலை தன் பெற்றோர்களைப் பார்த்து வர விரும்பினான். சாமியார் அநுமதித்ததோடு நில்லாமல், அவர் பிரியமாய் வளர்த்து வந்த கழுதை மேலேயே ஏறிச் செல்லும்படி உத்தரவிட்டார். கழுதையின் போஷணை முழுவதும் அவனிடமே ஒப்படைக்

கப்பட்டிருந்ததால் கழுதை அவனை விட்டு இணைபிரியாமலிருந்தது.

கழுதைமேல் உட்கார்ந்தபடி கொஞ்ச தூரம் சென்றவுடன் அவன் நன்றாகத் தூங்கிவிட்டான். கழுதையோ பாதையை விட்டு மலைமேல் எங்கெங்கோ சென்று கடைசியில் ஒரு கல் சரிவில் காலை வைத்தது. அடுத்த கணம் அது மலையிலிருந்து உருண்டது. நல்ல காலம்; அண்ணாமலை அங்கேயே தூக்கி எறியப்பட்டான். ஆனால் கழுதை மட்டும் உருண்டு உருண்டு கீழே விழுந்து நொறுங்கி இறந்தது. அண்ணாமலைக்கும் சரியான அடி.

பிறகு மெல்லக் கழுதையைத் தேடி அடக்கம் செய்தான். அந்தச் சமயம் கிராமவாசிகள் சிலர் அங்கே வந்தார்கள். அண்ணாமலை குழியை மூடுவதைக் கவனித்துவிட்டார்கள். அண்ணாமலை புளுக ஆரம்பித்தான். ''நானும் மகானான என் குருநாதனும் சேலம் போகப் புறப்பட்டோம். அவர் மலையில் கால் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டார். வயோதிகரான அவர் காயங்களால் இறந்தார். நான் அவருடைய பிரதம சீடன். அவரை இங்கே அடக்கம் செய்திருக்கிறேன்'' என்றான்.

அவர்கள் அவனைத் தங்கள் கிராமத்திற்கு அழைத்து வந்தார்கள். ஒரு பெரிய மகானின் சீடனென்று கேள்விப்பட்டு நோயாளிகள் அவனிடம் வந்தார்கள். ''நான் வைத்தியனல்ல. எனக்கு என் குருவின் மகிமை எதுவும் கிடையாது'' என்று என்ன என்னவோ சொல்லிப் பார்த்தான் அண்ணாமலை. பாச்சா பலிக்கவில்லை. பிறகு, தன் குருவின் பெயரைச் சொல்லி விபூதி கொடுத்தான். சுக்கிரதசை அடிக்கும்போது யார்தான் என்ன செய்ய முடியும்? நோயாளிகள் நம்பிக்கையினாலேயே சௌஸ்தமடைந்தார்கள். இதைக் கண்டதுமே இறந்து போன பெரிய மகானுக்குச் சமாதி கட்டவேண்டும் என்று அந்த ஊரார் தீர்மானித்து விட்டார்கள்.

கழுதையின்மேல் சமாதி எழுந்தது. அண்ணாமலைக்கு ஒரு மடம் கட்டுவித்து, சமாதி பூஜைக்கு அவனையே நியமித்தார்கள். அந்தப் பழைய குருவின் மடத்தைத் தேடிப் போவதை அனைவரும் நிறுத்தினார்கள். கூட்டமும் பணமும் அண்ணாமலைக்குச் சேரத் தொடங்கின.

அண்ணாமலை திரும்பி வராததும் தம் மடத்திற்குப் பக்தர்கள் வராமல் அடியோடு நின்றதும் குருவுக்கு ஆச்சரியத்தை விளைவித்தன. அங்கு வந்த ஒன்றிரண்டு பேர்களை விசாரித்தார். ஒருவாறு விஷயத்தைத் தெரிந்துகொண்டார். ஆனால் தமக்குப் போட்டியாகச் சமாதி எழுப்பியவன் தம் சிஷ்யன் அண்ணாமலைதான் என்று அவருக்குத் தெரியாது. புதிய மடத்தின் பக்கம் வந்தார். ஜனத்திரளைப் பார்த்தார். அண்ணாமலை அப்பொழுது பூஜையிலிருந்தான். வேலைக்காரர்களுக்குச் சாமியாரைத் தெரிந்திருந்ததால் அவரை உள்ளே போக அனுமதித்தார்கள். அங்கே போய் அண்ணாமலையைப் பார்த்ததும் சாமியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''ஏண்டா பையா, நீ இப்படித் துரோகம் செய்யலாமா?'' என்று சினந்தார்.

அண்ணாமலை அவரை உபசரித்து உட்காரச் சொல்லி ஆற அமர நடந்த வரலாற்றைச் சொன்னான். இதைக் கேட்ட சாமியார் விழுந்து விழுந்து சிரித்தார்.

''எப்படி, கதை சுவாரஸ்யம்?'' என்றான் அண்ணாமலை.

''அது சரி. நான் இப்பொழுது ஒரு கதை சொல்லப் போகிறேன். அது இதைத் தூக்கியடிக்கும் தாத்தாவாக்கும்; ஆமாம்!'' என்றார் சாமியார்.

''இருக்கவே முடியாது'' என்று சாதித்தான் அண்ணாமலை.

''சரி, இதைக் கேள்! என் மடத்துச் சமாதியிலுள்ள மகான், இந்தச் சமாதியிலுள்ள மகானின் சொந்தத் தாத்தா!'' என்றார். அவ்வளவுதான்; இருவரும் விழுந்து விழுந்து வயிறு வலிக்கும்படி சிரித்தார்கள்.

பாலர் கவி அரங்கம்

ஆட்டுக் குட்டி

துள்ளித் துள்ளி ஓடுது பார்
தோட்ட முழுதும் சுற்றுது பார்!
'மே,மே' என்று கத்துது பார்
மேலும் கீழும் பார்க்குது பார்!
என்னைக் கண்டு மிரளுது பார்
ஏய்த்து விட்டு ஓடுது பார்!
கிட்டச் சென்றால் உடனேயே
எட்ட ஓடிப் போகுது பார்
ஓடும் ஆட்டுக் குட்டியை
உன்னால் பிடிக்க முடியுமோ? —கே. என். மகாலிங்கம்

சென்னை கடற்கரை

சென்னை நகரக் கடற்கரை
சிங்காரக் கடற்கரை.
மேன்மை யான கடற்கரை
மிகவும் நீண்ட கடற்கரை.
அருமை யான ரேடியோ
ஆனந் தமாய்ப் பாடிடும்;
இனிமை யான காற்றுதான்
என்றும் வீசும் கடற்கரை.
குதித்து ஆடும் பிள்ளைகள்,
கூடி ஆடும் குழந்தைகள்,
மணலில் வீடு கட்டவே
மகிழ்ச்சி யூட்டும் கடற்கரை.
கடலை யுடனே மிக்சராம்,
களிப் பூட்டும் ஐஸ்கிரீம்;
சுடச் சுடவே சுண்டலாம்,
சொகுசாய் விற்கும் கடற்கரை.
கூட்ட மாக அனைவரும்
கூடி மகிழும் கடற்கரை.
எல்லா ருக்கும் சொந்தமாம்
எங்கள் சென்னைக் கடற்கரை. —'வள்ளிதாசன்.'

சைக்கிள் பரிசு

'மித்ரா'

"அப்பா! எனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தாஅப்பா. எல்லாப் பையன்களும் சைக்கிள் வச்சிண்டிருக்காங்க.''

''ஊஹூம்! அதெல்லாம் முடியாது! அப்புறம் நீ சதா சைக்கிளில்தான் ஊர் சுற்றிக்கொண்டிருப்பே! பாடம் படிக்கவே மாட்டே!''

''இல்லேப்பா! அன்றைக்குப் பள்ளிக்கூடத்திலே சைக்கிள் பந்தயம் வச்சாப்பா. அதிலே நான்தான் முதல்லே ஜயிச்சேன். அதனால் ஸ்போர்ட்ஸ்லே என்னை எடுத்திருக்காப்பா.''

''அதுக்காக..?''

''அவா, அவா சொந்தமா சைக்கிள் கொண்டு வரணுமாம். தினம் வாடகை சைக்கிள் எடுக்கிறதை விட ஒரு சைக்கிளே வாங்கி விடலாம் அப்பா.''

''ஆகட்டும், யோசித்துச் சொல்லுகிறேன்'' என்றார் அவன் தகப்பனார்.

வேணுவுக்கு அந்த வருஷம் நடக்கும் பந்தய விளையாட்டுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆசை. சைக்கிள் பந்தயத்தில் ஜயித்தால் ஜயித்தவனுக்கு மெடல். அவன் படிக்கும் பள்ளிக்கூடத்திற்கு வெள்ளிக் கப்.

அதனால்தான் அவன் ஆசையைத் தன் தகப்பனாரிடம் தெரிவித்து அவரையும் சம்மதிக்க வைத்தான்.

இரண்டு தினங்களில் ஓர் அழகான புத்தம் புதிய சைக்கிள் அவன் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் வேணுவிடம் அவன் தாயார், ''சைக்கிள்தான் வந்துவிட்டதே என்று சதா சைக்கிளில் சுற்றினாயோ நாளைக்கே திரும்பிக் கொடுத்துவிட்டு வரச் சொல்லிவிடுவேன்.. ஆமாம். பந்தயத்தில் ஜயிச்சாமட்டும் போதாது. பரீட்சையிலும் பாஸ் பண்ணவேணும்'' என்று சொன்னாள்.

''சரி அம்மா'' என்றான் வேணு.

வேணுவுக்குத் தனக்கும் ஒரு சைக்கிள் வந்து விட்டதில் பெருமகிழ்ச்சி. அதைக்கொண்டு போய்த் தன் நண்பர்களிடமெல்லாம் காண்பித்தான். அதில் ஒரு பெருமை அவனுக்கு!

தினம் அந்தச் சைக்கிளில்தான் பள்ளிக்கூடம் போனான். அவன் பாடமே படிப்பதில்லை என்றும் சதா சைக்கிளில்தான் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்றும் அவன் தகப்பனாரிடம் தாயார் புகார் செய்தாள்.

ஸ்போர்ட்ஸ் முடிந்ததும் அதை விற்று விடுவதென்று அவன் தகப்பனார் முடிவு செய்தார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு வேணு படித்த பள்ளிக்கூடத்தில் போட்டிப் பந்தயம் நடைபெற்றது. வேணு சைக்கிள் போட்டியில் கலந்துகொண்டு முதல்வனாக வெற்றியடைந்தான்.

ஒவ்வொரு பந்தயங்களிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. வேணு தனக்குக் கிடைத்த மெடலை

அணிந்துகொண்டு கம்பீரமாக நடந்து வந்தான்.

அன்று மாலை வேணு பந்தய மைதானத்திலிருந்து திரும்பினான். பெருமிதத்துடன்தான் சென்றான். தான் முதல்வனாக வெற்றி பெற்று விட்ட மகிழ்ச்சி, மற்றவர்களுக்கு முன்னால் தனக்கு மெடல் கிடைத்திருக்கும் பெருமை, இவற்றுடன் தன் வீட்டிற்குச் சென்றான். தாயார் தகப்பனாரிடம் தான் பெற்ற மெடலைக் காண்பித்தான். மற்றப் பரிசு பெற்றவர்களைப் பற்றியும் சொன்னான்.

அன்று வேணு தன் நண்பர்களுடன் சினிமாவுக்குச் சென்றான். இரவு வீடு திரும்பியபொழுது அவன் சைக்கிள் அங்கே காணப்படவில்லை. அதைப்பற்றித் தகப்பனாரிடம் கேட்க அவனுக்குப் பயம். அதனால் தாயாரிடம் போய்க் கேட்டான். ''அப்பா. விற்றுட்டார்'' என்றாள் தாயார்.

அதைக் கேட்டபொழுது அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. சைக்கிள் வந்த அன்று தாயார் செய்த எச்சரிக்கையும் அத்துடன் நினைவுக்கு வந்தது. எப்படியும் இந்த வருஷம் நன்றாகப் படித்து முதலில் பாஸ் செய்து விட்டுத்தான் மறு காரியம் என்று தீர்மானித்தான். அதன்படி நன்றாகப் படித்தான்.

பரீட்சை முடிந்ததும் வேணு தன் அத்தையின் ஊருக்குச் சென்றான், விடுமுறை தினங்களை ஆனந்தமாகக் கழிக்க.

ஒரு நாள் திடீரென்று அவ்வூரில் உள்ள குடிசை வீடுகள் தீப்பற்றிக் கொண்டன. தீயணைக்கும் படையினருக்குத் தந்தி யடிக்க அங்கிருந்து ஐந்து மைல் தூரம் செல்ல வேண்டும். சைக்கிளில் போனால் சீக்கிரம் முடியும் என்று வேணுவின் மாமா ஒரு சைக்கிளைக் கொடுத்து வேணுவை அனுப்பினார்.



தந்தி கொடுத்துவிட்டுத் திரும்பி வரும் பொழுதுதான் வேணு அந்தச் சைக்கிளை நன்ருகப் பார்க்க முடிந்தது. தனக்கு மெடல் வாங்கித் தந்த அந்த அதிர்ஷ்ட சைக்கிள் அல்லவா அது! அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'என் சைக்கிள் இவரிடம் எப்படி வந்தது?' என்று எண்ணினன்.

வீட்டிற்கு வந்ததும், ''மாமா! இது என் சைக்கிள்தானே?'' என்று கேட்டான்.

''ஆமாம். இது இனி உன் சைக்கிளேதான்!'' என்ருள் அவன் அத்தை.

''என் சைக்கிளா!....இதை விற்று விட்டதாக அம்மா சொன்னுளே!'' என்ருன் வேணு ஆச்சரியத்துடன்.

''ஆமாம். படிக்காமல் நீ சைக்கிளில் ஊர் சுற்றப் போகிருயே என்று நீ சினிமாவுக்குப் போயிருந்தபோது எங்களிடம் அனுப்பி விட்டார் உன் அப்பா..இப்பொழுது நீ பரீட்சையில் முதல்வனுகத் தேறிவிட்டாயாம்..''

''அதனுல் எனக்கு இது பரிசா?''

''ஆமாம்'' என்ருள் அவன் அத்தை.

வேணுவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. தன்னைப் பந்தயத்தில் முதல்வனுகத் தேறச் செய்த அந்தச் சைக்கிளே தன்னைப் பரீட்சையிலும் முதல்வனுகத் தேற வைத்ததில் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி.

1955-இல்
அதிருஷ்டக் குழந்தைகள்

1955-ஜனவரி 31 தேதிக்குள் கண்ணன் சந்தாதாராகச் சேருபவர்கள் அனைவரும் இதில் இடம் பெறுவார்கள்.

குடும்பச் சந்தா உள்பட எல்லாக் கண்ணன் சந்தாதார்களுடைய எண்களையும் குலுக்கிப் போட்டு, 10 பரிசுகள் தேர்ந்தெடுக்கப்படும்.

முதல் பரிசு பெறும் குழந்தைக்கு	ரூ.	15/-
இரண்டாவது பரிசு பெறும் குழந்தைக்கு	ரூ.	10/-
மூன்ருவது பரிசு பெறும் குழந்தைகள் (மூன்று பேர்களுக்குத் தலா)	ரூ.	5/-
நாலாவது பரிசு பெறும் குழந்தைகள் (ஐந்து பேர்களுக்குத் தலா)	ரூ.	2/-

உங்கள் சந்தாவை அனுப்பிவிட்டீர்களா?

ரமணியின் அதிருஷ்டம்

ஜயலக்ஷ்மி

"அம்மா! அக்காவை ஊருக்கு அனுப்ப வேண்டாமா?' என்றுன் ரமணி.

''அனுப்பத்தான் வேண்டும். கையில் ரெயில் சார்ஜுக்கே பணமில்லே. குறைந்தது ஐம்பது ரூபாயாவது வேண்டுமே..'' என்ருள் ராஜம்மாள் வருத்தத்துடன்.

''நானும் எவ்வளவோ இடங்களில் வேலே கேட்டுப் பார்த்துவிட்டேன். ஒன்றும் பயனில்லே'' என்றுன் ரமணி வேதனேயோடு.

''நீ என்னப்பா செய்வாய்? பத்தாவது கூட முழுக்கப் படிக்கவில்லே நீ! உனக்கு எப்படி வேலே கிடைக்கும்?..''

அவனேயே பார்த்துக்கொண்டு விசனத்துடன் உட்கார்ந்திருந்தாள் ராஜம்மாள்.

ராஜம்மாளுக்கு இரண்டு குழந்தைகள். மூத்தவள் பத்மா. இளேயவன் ரமணி. மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும்போது அவனுடைய தகப்பனுர் பசுபதி ஐயர் குடும்பக் கஷ்டம் பொறுக்க முடியாமல் வீட்டைவிட்டுக் கிளம்பி எங்கேயோ போய்விட்டார்.

அதற்குப் பிறகு ராஜம்மாள் மிகவும் சிரமப்பட்டுப் பத்மாவையும் ரமணியையும் வளர்த்தாள். நாலு இடங்களில் சமையல் வேலே செய்து இருவரையும் படிக்க வைத்தாள். பத்மாவுக்குக் கல்யாணம் செய்ய வேண்டியிருந்தது. எங்கெங்கேயோ கடனுகப் பணம் வாங்கி, அவள் கல்யாணத்தை நடத்தினுள் ராஜம்மாள். ரமணியின் படிப்பை அரைகுறையாக நிறுத்திவிட நேர்ந்தது.

பத்மாவின் கணவன் தனக்குப் பவுன் மோதிரம் செய்து போட்டால்தான் தீபாவளிக்கு வரமுடியும்

என்ருன். இரண்டு மாதங்களுக்குள் கட்டாயம் செய்து போட்டுவிடுவதாக உறுதி கூறினுள் ராஜம்மாள். அவனும் சம்மதித்துத் தீபாவளிக்கு வந்து விட்டுப் போனுன்.

ஊருக்குப் போய் ஒரு மாதம் கழித்து அவனிடமிருந்து மோதிரத்துடன் பத்மாவைப் பொங்கலுக்குள் அனுப்பி விடவேண்டும் என்று கடிதம் வந்துவிட்டது. ராஜம்மாளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

2

ரமணி வீட்டிற்குத் திரும்பி வந்தபோது அவன் கையில் ஒரு பெரிய பர்ஸ் இருந்தது. அதைப் பார்த்தும் ராஜம்மாள் திடுக்கிட்டுப் போனுள்.

''நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டதம்மா! 'சூர்ய பவன்' ஹோட்டல் வாசலில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு பெரியவர் 'டாக்ஸி'யில் வந்து இறங்கி உள்ளே போனுர். அவர் போகிறபோது அவருடைய ஜிப்பா பையிலிருந்து இந்த மணி பர்ஸ் கீழே விழுந்துவிட்டது. அதை அவர் பார்க்கவில்லை; நான் அதை எடுத்துக் கொண்டு ஓடி வந்துவிட்டேன். இந்தாம்மா! இதில் நூறு ரூபாய் இருக்கிறது'' என்ருன் ரமணி.

''ரமணி! நீ எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டாய்! போ! இப்பொழுதே அந்த ஹோட்டலுக்குப் போய், அந்தப் பெரியவரைத் தேடிக் கண்டுபிடித்து அவரிடம் இந்தப் பர்ஸைக் கொடு'' என்ருள் ராஜம்மாள்.

''அம்மா! நமக்கோ கஷ்டம் பொறுக்க முடியவில்லை. இந்த நூறு ரூபாய் காணுமற்போனதால் அவருக்கு ஒன்றும் கஷ்டம் வந்து விடாதே!'' என்று கெஞ்சினுன் ரமணி.

''கஷ்டம் பெரிதல்ல ரமணி! மனிதர்க்கு நேர்மைதான் பெரிது. போ, சீக்கிரம்!'' என்று துரிதப் படுத்தினுள் ராஜம்மாள்.

ரமணி தலை தெறிக்க ஓடினுன்.

3

''ஸார்! நீங்கள் சற்று நேரத்திற்கு முன்பு டாக்ஸியை விட்டு இறங்கி உள்ளே வரும்போது இந்த பர்ஸ் உங்களுடைய பையிலிருந்து நழுவிக் கீழே விழுந்து விட்டது. இந்தாருங்கள்!'' என்று மணிபர்ஸை அந்தப் பெரியவரிடம் கொடுத்தான் ரமணி.

''எங்கே தவறி விட்டு விட்டோமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். உன் நேர்மையைக் கண்டு ரொம்பவும் ஆச்சரியப்படுகிறேன். இந்தா! உனக்கு என் அன்பளிப்பு!'' என்று கூறியபடி ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து ரமணியிடம் நீட்டினுர் அந்தப் பெரியவர்.

''எனக்கு இந்த ரூபாய் வேண்டாம், சார்! அதற்குப் பதிலாக எங்கேயாகிலும் ஒரு வேலை கிடைக்க வழி செய்தால் மிகவும் நன்றியுள்ளவனுக இருப்பேன்!'' என்ருன் ரமணி.

''வேலை வாங்கிக் கொடுப்பதற்கு எனக்கு இந்த ஊரில் யாரையும் தெரியாது. நான் இந்த ஊரை விட்டுப் பன்னிரண்டு வருஷங்களாகின்றன. இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறேன். என் குடும்பத்தார் - நான் விட்டுச் சென்ற வீட்டில் காணேம். அவர்களைத்தான் தேடியலைந்து கொண்டிருக்கிறேன். நீ வேண்டுமானுல் எனக்கு உதவியாக இருந்து அவர்களைக் கண்டு பிடிக்க முயற்சி செய். அவர்கள் அகப்படும் வரையில் உனக்குத் தினமும் சாப்பாட்டிற்கான செலவைத் தந்துவிடுகிறேன். அவர்களைக் கண்டு பிடித்த பிறகு உனக்கு ஐம்பது ரூபாய் இனும் தருகிறேன். இவ்வளவுதான் என்னுல் செய்யக் கூடியது'' என்று கூறினுர் அந்தப் பெரியவர்.

அதற்கு ரமணி, ''உங்கள் விருப்பப்படியே நான் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறேன். ஆனுல் உங்களுடைய குடும்பத்தாரை நான் முன் பின் பார்த்ததில்லையே. எப்படி அவர்களை அடையாளம் கண்டு பிடிப்பது?'' என்று கேட்டான் ரமணி.

''இதோ பார்! எனது குடும்பப் போட்டோ!'' என்று ஒரு போட்டோவை ரமணியிடம் காட்டினார் பெரியவர்.

அதில் இருந்தவர்களை உற்றுப் பார்த்த ரமணி, ''இந்த அம்மாள் என் தாயார் அல்லவா? இது எப்படி உங்களிடம் வந்தது?'' என்று ஆச்சரியம் மேலிடக் கேட்டான்.

''இது உன் தாயாரா? அப்படியானால் அவள் பெயர் என்ன?'' என்றார் பெரியவர் பரபரப்புடன்.

''ராஜம்மாள்!''

''உன் பெயர்?''

''ரமணி! என் அக்கா பெயர் பத்மா!'' என்றான் ரமணி மடமடவென்று.

''ரமணி! என் செல்வமே! நீ என் பிள்ளைதானடா! நான் உன் தகப்பனார் பசுபதி. தெய்வம் தான் நம்மை ஒன்று சேர்த்துவிட்டது!'' என்று அடங்கா ஆர்வத்துடன் ரமணியை இறுக அணைத்துக் கொண்டார் அவர்.

''அப்பாவா? நீங்கள் என் அப்பாவா!'' என்று கேட்டு வியந்து மகிழ்ந்தான் ரமணி.

4

மறு நிமிஷமே அவர்களைச் சுமந்துகொண்டு டாக்ஸி விரைந்தது. காரிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்ததும், ''ஹா! நீங்களா?'' என்று கேட்டுக்கொண்டே வாசலுக்கு ஓடி வந்தாள் ராஜம்மாள். பத்மாவும் அம்மாவைத் தொடர்ந்தாள். பசுபதி எல்லோருக்கும் சமாதானம் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். எல்லோரும் ரொம்பவும் சந்தோஷப் பட்டார்கள்.

தன் பெட்டியைத் திறந்து எல்லோருக்கும் புது புதுத் துணிகளும், நகைகளுமாக எடுத்துக்கொடுத்தார் பசுபதி.

''இதெல்லாம் எப்படி வாங்கினீர்கள்?'' என்று கேட்டாள் ராஜம்மாள்.

''மலாயா, டீ எஸ்டேட்டில் உடல் வருந்த உழைத்துச் சம்பாதித்தேன். ஐம்பதினாயிரம் சேர்ந்தது. போதுமென்று கிளம்பி வந்துவிட்டேன்!'' என்றார் பசுபதி.

பிறகு என்ன, ஏது என்று கேட்கவும் வேண்டுமா? பத்மாவின் புருஷனுக்குக் கடிதம் பறந்தது, அவனும் வந்தான். வீட்டில் இன்பமும், மகிழ்ச்சியும் நிறைந்து வழிந்தன. ரமணியும் பாதியில் விட்ட படிப்பைத் தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

211795

கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

எஸ். பார்த்தசாரதி, நாகபுரி.

சந்திர மண்டலத்தில் ஆகர்ஷண சக்தி கிடையாது என்கிறார்களே, அது உண்மையா? எப்படிக் கண்டு பிடித்தார்கள்?

சந்திர மண்டலத்தில் ஆகர்ஷண சக்தி உண்டு. ஆனல், அது பூமியின் ஆகர்ஷண சக்தியை விடக் குறைவு. அதில் ஆறில் ஒரு பங்கு என்று வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

சந்திரனின் மேற்பரப்பிலுள்ள ஆகர்ஷண சக்தி (Gravitation) அதன் பொருள் திணிவையும் (Mass), அதன் கோளத்தின் ஆரத்தையும் (Radius), கெப்ளர் (Kepler) என்னும் மகா நிபுணர் கூறிய விதியின்படி சில சூத்திரங்களை வைத்துக்கொண்டு, சந்திரனின் பொருள் திணிவைக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

சந்திரனின் பொருள் திணிவைப் பல வழிகளில் நிர்ணயிக்கிறார்கள். சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்கு ஆகும் நேரத்தையும் வேறு சில அம்சங்களையும் வைத்துக் கொண்டு, கண்டுபிடிப்பது ஒரு வழி. கடலின் ஏற்றவற்றங்களிலிருந்து சந்திரனின் ஆகர்ஷண சக்தியையும் கண்டுபிடிப்பது மற்றொரு வழி. பூமியின் மேற்பரப்பிலுள்ள ஆகர்ஷண சக்தியே சந்திரனைப் பூமியைச் சுற்றி ஓடச் செய்கிறது. அதிலிருந்தும் சந்திரன் பொருள் திணிவைக் கண்டுபிடிக்கலாம். இன்னும் வேறு சில வழிகளும் இருக்கின்றன. இவைகளெல்லாம் கிட்டத்தட்ட ஒரே விடையையே அளிக்கின்றன.

சந்திர மண்டலத்தின் (கோணத்தின்) ஆரத்தை அதன் இடமாறு தோற்றத்தையும் (Parallax), சந்திரவிட்டத்தின் கோணத்தையும் வைத்துக்கொண்டு, கணக்கிட்டுக் கண்டுபிடிக்கிறார்கள்.

சந்திரனின் பொருள் திணிவும், அதன் ஆரமும் தெரிந்துவிட்டபடியால், அதன் ஆகர்ஷண சக்தியைக் கணக்கிடுவது எளிது.

லக்ஷ்மிநாராயணன், சென்னை 5.

உலகத்திலேயே மிகவும் கனமான வஸ்து எது?

நீ கேட்கும் கேள்வி அவ்வளவு தெளிவாக இல்லை. நீ இயற்கைப் பொருளைப்பற்றிக் கேட்கிறாயா, அல்லது மனிதன் செய்த செயற்கைப் பொருள் ஏதாவது பற்றிக் கேட்கிறாயா, அல்லது பொருள்களின் ஒப்பு-அடர்த்தியைப்பற்றிக் கேட்கிறாயா என்றே தெரியவில்லை.

ஒப்பு-அடர்த்தி (Specific Gravity) என்பது பொருளின் திண்மையைப் (Density) பொறுத்தது. மொத்தக் கனம் திண்மையையும் பரிமாணத்தையும் பொறுத்தது. ஒப்பு-அடர்த்தி என்பது நீரின் அடர்த்தியை 1 என்று வைத்துக் கொண்டால், ஒரு பொருளின் திண்மை என்ன என்று ஒப்பிட்டுச் சொல்லலாம்.

அப்படிப் பார்க்கும்போது, உலகத்திலுள்ள மூலகங்களில் (Element) மிகவும் அடர்த்தியானவை யுரேனியம் (Uranium) வகையைச் சேர்ந்தவை. யுரேனியத்தின் ஒப்பு அடர்த்தி சுமாராக 238 ஆக இருப்பதால், அதையே மிகவும் கனமான பொருள் என்று ஒருவாறு சொல்லலாம்.

எஸ். ராஜகோபால், புனு.

நெருப்பு எரியும்போது ஏன் சப்தம் உண்டாகிறது?

நெருப்பு எரியும்பொழுது எப்பொழுதும் சத்தம் உண்டாவதில்லை. சில வேளைகளில் உண்டாகும்; சில வேளைகளில் உண்டாவதில்லை.

ஒரு வகையான சத்தம் வெடிப்பு. ஈர விறகு, கொட்டாங்கச்சி முதலியவை எரியும்போது பட்பட் என்று வெடிக்கும். ஈர விறகில் நீராவி உண்டாகி வெடித்து வெளிப்படுவதால் இந்த ஓசை உண்டாகிறது. கொட்டாங்கச்சியில் அது விரிந்து விட்டுப்போகும்போது குச்சியை ஒடிப்பது போன்ற ஓசை உண்டாகிறது.

எரியும் சுவாலையால் வாயுக்கள் மேலே தூக்கிச்செல்லப்படுகின்றன. அவை விரைவாகச் சென்றால் சில வேளைகளில் சீறுவது போலவும், உறுமுவது போலவும் ஓசை உண்டாகலாம்.

காய்ந்த விறகு எரிந்தால், சாதாரணமாக ஓசை உண்டாகாது.

சி. எம். அண்ணாமலை, கொண்டாலம்பட்டி, சேலம்.

150 வருஷங்களுக்கு முன்னால் தமிழ் நாட்டில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நடந்தது என்று சொல்லுகிறார்களே, அதை ஏன் சர்க்கார் பாடத்தில் போடவில்லை?

சரித்திரப் பாடத்தில் சாதாரணமாகப் பெரிய நிகழ்ச்சிகளைத்தான் வர்ணிப்பது வழக்கம். சிறிய நிகழ்ச்சிகளுக்கும், குழப்பங்களுக்கும், கலகங்களுக்கும் சரித்திரக்காரர்கள் தங்கள் நூல்களில் அதிகம் இடம் கொடுப்பதில்லை. ஆனால் பெரிது எது, சிறிது எது என்று மதிப்பிடுவது சரித்திரக்காரர்களின் பட்சபாதமில்லா மன நிலையையும், மற்ற நிகழ்ச்சிகளோடு ஒப்பிடும் போது அந்த நிகழ்ச்சிக்குரிய மதிப்பையும் பொறுத்தது. விரிவான இந்திய நாட்டின் சரித்திரத்தைச் சுருக்கமாக எழுதும்போது இந்த நிகழ்ச்சியை அவ்வளவு பெரிது என்று சொல்லமுடியாது,

ஆனால், சென்னை ராஜ்யத்தின் சரித்திரத்தை எழுதினால் அதில் இந்த நிகழ்ச்சி இடம் பெறலாம். திருநெல்வேலி ஜில்லாவின் சரித்திரத்தை எழுதுவதாயிருந்தால் இந்த நிகழ்ச்சி நிச்சயமாக இடம் பெறவேண்டும்.

பி. ஏ. மகமதுயாசீன், சென்னை.

ஏ. டி. என்பதற்குச் சிலர் (Anno Domini) என்றும் சிலர் (After the death of Christ) என்றும் சொல்கிறார்கள். இதில் எது சரி? எது தப்பு?

ஏ. டி. என்ற இரண்டும் ஆங்கில எழுத்துக்கள் என்று நாம் சாதாரணமாக எண்ணி வருகிறோம். ஆனால் ஆங்கில எழுத்துக்கள் ரோமன் (Roman Script) லிபியிலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டவை. லத்தீன் பாஷை (Latin) அந்த லிபியில் எழுதப்படுகிறது.

ஏ. டி. என்பவை அன்னோ டாமினை (Anno Domini) என்னும் இரண்டு லத்தீன் சொற்களின் முதல் எழுத்துக்கள். அந்தச் சொற்களைக் குறிப்பதற்கு இவை வழங்கப் படுகின்றன.

'அன்னோ டாமினை' என்னும் சொற்களுக்கு 'தேவன் அவதரித்த ஆண்டில்' என்பது பொருள். இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டிலிருந்து இந்தச் சகாப்தம் தொடங்குகிறது.

ஆகையால் கிறிஸ்து உயிர் நீத்த பின்னர் என்பது தப்பு. அன்னோ டாமினை என்பதே சரி.

ச. சிதம்பரநாதன், இலங்கை.

ஐம்புலன்களையும் அடக்கியவர் யார்?

நமது நாட்டில் எத்தனையோ முனிவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி வாழ்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களில் மிகச் சிறந்தவர்களாகப் புத்தரையும் சினன் என்னும் அருகனையும் குறிப்பிடலாம். பிற்காலத்திலும் புலன்களை அடக்கிய பல மகான்கள் இருந்திருக்கிறார்கள். பிற நாடுகளிலும் இருந்திருக்கிறார்கள்.

ஆர். எஸ். ராஜகோபாலன், பவானி.

கேளுங்கள், சொல்கிறேன் என்று பேராசிரியர் விஞ்ஞானம் கூறுவதால் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட கேள்விகள்தான் கேட்க வேண்டுமா? மற்றக் கேள்விகளும் கேட்கலாமா?

பொது அறிவு சம்பந்தமான கேள்விகளும் கேட்கலாம்.

பி. எஸ். கௌரிசங்கர், புதுடில்லி.

மிருக வகையில் பல நாள் ஜீவித்திருக்கும் மிருகங்கள் எவை?

இந்த நூற்றாண்டுக்கு முன் வரை பிராணிகளின் வயதுகளைப் பற்றிப் பல வகையாக எண்ணி வந்தார்கள். காகம், ஆமை, யானை, திமிங்கிலம் முதலியவை மிக நெடுங்காலம் வாழ்கின்றன என்று நம்பினார்கள்.

இப்பொழுது அந்தப் பழங்கால நம்பிக்கைகள் அவ்வளவு சரியல்ல என்று தோன்றுகிறது என்கிறார்கள். நிலத்தில் வாழும் பிராணிகளில் ஆமையும், யானையும், அடுத்தபடியாக மனிதனுமே நெடுங்காலம் வாழும் பிராணிகள் என்பது தான் இக்கால முடிவு.

தே. பார்த்தசாரதி, சென்னை.

பைபிளில் மொத்தம் எத்தனை வார்த்தைகள் உள்ளன?

பைபிள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. நீ கேட்பது ஆங்கில மொழியில் உள்ள பைபிளைப்பற்றி என்று எண்ணுகிறேன்.

ஆங்கில பைபிளில் 773,746 சொற்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்திருக்கிறார்கள். பைபிளில் 3,566,480 எழுத்துக்கள் இருக்கின்றன என்றும் எண்ணிச் சொல்லுகிறார்கள்.

கி. நாராயணன், புதுக்கோட்டை.

இந்தியாவில் அதிகமாகப் பேசப்படும் பாஷை எது?

ஹிந்தி.

எஸ். வி. சாமிநாதன், கும்பகோணம்.

தற்காலத்துக் கல்வி நிலைமை எவ்வாறு இருக்கிறது?

இது ஒரு மிகப் பெரிய கேள்வி: தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாததும் கூட. ஆகையால் பொதுவாக விடை சொல்லுகிறேன்.

நமது நாட்டில் இப்போது எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகையால் எல்லோருக்கும் பயன்படும்படியாகக் கல்வியைப் பரப்ப முயலவேண்டும். இதற்கு முயற்சிகள் நடந்துவருகின்றன.

கல்வியும் தரமும் திருப்தியாக இல்லை என்று அறிஞர்கள் நினைக்கிறார்கள். ஆகையால், அடிப்படி முதல் உச்சிப்படி வரை அதைத் திருத்தவும் முயற்சிகள் நடந்துவருகின்றன.

ஆனால் எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் அமைக்கப்பட்டிருக்கும் கல்வி முறை நாளடைவில், நாடுகளின் சமூக நிலைகள் மாறுவதற்கு ஏற்றபடி, மாறி வரவேண்டும் என்று அறிஞர்கள் முயலுவார்கள். பல விஷயங்களையும் சீர்தூக்கி, முறைகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டு, அவசரப்படாமல்—ஆனால் உறங்கியும் போகாமல்—திருத்தியமைப்பதே நல்ல முறை. 'மெல்லென விரை' என்னும் லத்தீன் பழமொழி இந்த விஷயத்துக்குப் பொருந்தும்.

சந்திரகிரிக் கோட்டை

"ஜனு"

பெரியகோட்டைப் பாளையக்காரர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். இந்தச் சகோதரர்கள் இருவரையும் எப்படி நல்லதனமாக வழிக்குக் கொண்டு வருவது என்பதே அவர் யோசனை. அவர் இது போன்ற விஷயங்களில் மிகவும் சாமர்த்தியக்காரர்தான். அதேபோல் அவருடைய குமாரி குந்தவியும் புத்தி நுட்பத்தில் சிறந்தவள். அவள் வயதில் சிறியவளானாலும் புத்தியில் பெரியவள். அவள் மெதுவாகத் தந்தையின் அந்தப்புரத்துக்கு வந்து சேர்ந்தாள்.

''ஏன் அம்மா குந்தவி, இரவு அதிக நேரமாகி விட்டதே. நித்திரை செய்யப் போகவில்லையா?'' என்று கேட்டார் தம் மகளைப் பார்த்து.

''தூக்கமே இன்று வரவில்லை, அப்பா!'' என்றாள் குந்தவி.

இந்தச் சகோதரர்களில் முதலில் விமலன் வந்ததிலிருந்தே அவள் மிகவும் உற்சாகத்துடன் இருப்பதை மன்றாடியார் கவனித்தார். ராஜகுமாரர்களுடைய விஜயம் அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அவர்களுடைய போட்டி பற்றியே ஏதோ பேச வந்திருக்கிறாள் என்று மன்றாடியார் எண்ணினார்.

அது சரியாக இருந்தது.

''விமலன் மிகவும் ரோசத்துடன் இருக்கிறார் போலிருக்கிறதே!'' என்றாள் குந்தவி.

''ஆமாம் குழந்தாய்! இது சகஜந்தானே! தோல்வியை ஏற்றுக்கொள்ள யாருக்குத்தான் மனசு இடம் தரும்? அமலன் காட்டும் இரக்கம் விமலனுக்கு இன்னும் ரோசத்தை உண்டாக்குகிறது. போட்டி வைக்காமல் முடியாது போலிருக்கிறது!'' என்றார் மன்றாடியார்.

''அப்படியானால் போட்டி வைத்து விடுங்களேன்! போட்டி என்றால் நான்கூட உங்களுக்கு உதவியாக இருப்பேனே!'' என்றாள் குந்தவி.

''எப்படி?''

''அப்பா! சின்னவருக்கோ போட்டியில் நம்பிக்கையில்லை. பெரியவருக்குப் போட்டி நடைபெறுவதில் மனம் இல்லை. அவர் ராஜ்யத்தையே விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். ஆனால் இளவரசியை மட்டும் மணந்துகொள்ள விரும்புகிறார். இந்த நிலை

மையில் போட்டி வைப்பது மிகவும் சுலபமாயிற்றே'' என்று கூறினுள் குந்தவி.

மன்ருடியாருக்கு இவள் சொன்னது ஏதோ புதிராக இருந்தது. ''நீ என்ன எண்ணுகிருய் என்று தெரியவில்லை குழந்தாய்! தெளிவாகச் சொல்லேன்!'' என்ருர்.

குந்தவியின் முகம் வெட்கத்திஞல் சிவந்து போயிற்று. அவள் எதை எண்ணினுளோ அதை அவ்வளவு வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. அதற்காக வேறு மாதிரியாகச் சொல்லத் தொடங்கினுள்.

''அமலன் போட்டியில் ஜயிக்க முடியாமல் போக வேண்டும். இதற்கு ஒரு வழி இருக்கிறதே, அது உங்களுக்குத் தெளிவாகவில்லையா?'' என்று கேட்டாள்.

மன்ருடியாருக்கு ஒருவாறு விஷயம் விளங்கியது. குந்தவி விமலனிடம் அன்புகொண்டிருக்கிருள் என்பது தெரிந்தது. விமலனும் குந்தவியிடம் அன்புடன் இருக்கிருன் என்பது நிச்சயம். இல்லாவிட்டால் குந்தவி ஒருதலைப் பட்சமான அன்பு கொள்வாளா? மன்ருடியாருக்கு இது கவலையைக் கொடுத்தது. விமலனே ராஜகுமாரன். ஆனல் பாளையக்காரர் ஒருவரின் மகளை அவன் மணந்து கொள்வது என்று வந்தால் அது சாத்தியமா? அதையும் தவிர போட்டி என்று வைத்துவிட்டு, மகளின் கல்யாணத்துக்கு வழி செய்துவிட்டார் என்ற பழிச் சொல் வந்துவிடுமே! அதற்கு இடம் கொடுக்கலாமா?

அதனுல் அவருக்கு மேலும் கவலை அதிகரித்தது. ''குழந்தாய்! நீ சொல்லும் யோசனையில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அந்த எண்ணம் உனக்கு இருந்தால், அதை விட்டொழித்து விடுவதே நலம். கூடுமானவரையில் சகோதரர்களுக்குள் ஒரு சமரசம் செய்து வைக்கவே நான் விரும்புகிறேன்'' என்ருர்.

''அப்பா! சந்திரவர்ம ராஜாவின் விருப்பத்தை மறந்து விட்டீர்களா? போட்டி எப்படியும் நடந்துதான் ஆகவேண்டும். அதே சமயத்தில் அரசகுமாரியை உள்ளன்புடன் விரும்புகிற அரசகுமாரனைக் கண்டு பிடிக்கவேண்டும். இதற்குப் போட்டி என்று வைக்காமல் முடியுமா?'' என்று கேட்டாள் குந்தவி.

''ஆமாம். போட்டி வைத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு நீ ஏதோ ஒரு முடிவு செய்து வைத்திருக்கிருய் போலிருக்கிறது. சொல்லேன், கேட்போம். சரியாக இருந்தால் அதையே வைத்து விட்டால் போகிறது!''

குந்தவி எந்தமாதிரியான போட்டியை ஏற்படுத்தலாம் என்று தந்தையிடம் விவரித்துக் கூறினுள். அவளுடைய போட்டி நேர்மையாகவும் சந்திரவர்ம ராஜனுடைய விருப்பத்தை அப்படியே நிறைவேற்றுவதாகவும் இருப்பதை உணர்ந்த மன்ருடியார், ''சபாஷ்? சபாஷ்!'' என்று தம் குமாரியைக் கொண்டாடினுர். அரச குலத்துக்கு ஏற்ற மதி நுட்பமும் நற்பண்பும் அவளிடம் அமைந்திருப்பதைக் கண்டு வியந்தார்.

மறு நாள் மாலை போட்டி நடைபெறும் என நகர மாந்தர்களுக்குத் தண்டோரா மூலம் காலையிலேயே அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மக்கள் சாரிசாரியாக அரண்மனையை நோக்கி வரத் தொடங்கினுர்கள். ஆண்களும் பெண்களும் அரண்மனை ஆயிரக்கால் மண்டபத்திலே திரள் திரளாகக் கூடினுர்கள்.

குறித்த நேரத்தில் சபை கூடியது. நடுவில் மன்ருடியார் அமர்ந்திருந்தார். அவருக்கு இருபுறத்திலும் இரண்டு ராஜகுமாரர்களும் அமர்ந்திருந்தார்கள். சபை முழுவதும் ராஜ வம்சத்துப் பிரமுகர்களும் ஸ்திரீகளுமாக அலங்கரித்தார்கள்.

மன்ருடியார் எழுந்து போட்டியைப் பற்றிக் கூறினுர்.

''நகரப் பெருமக்களே! ராஜ வம்சத்துப் பெரியோர்களே!

''நமது பெருமதிப்புக்குரிய சந்திர வர்ம அரசருடைய திருவுள்ளப்படி மூன்ருவது கோட்டையான இங்கே போட்டி நடக்கிறது. இதற்கும் மற்றப் போட்டிகளுக்கும் வித்தியாச முண்டு. இந்தக் கோட்டையிலுள்ள செப்பு முறியைப் பெற ஒரே போட்டிதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் சுலபமான போட்டி. இதோ இந்தச் சபையின் நடுவிலே ஒரு திரை கட்டப்படும். திரைக்குப் பின்னே இளம் பெண்ணொருத்தி இருப்பாள். ராஜகுமாரர்களில் யார் அவளை, 'சரி, சம்மதம், சந்தோஷம்' என்று மூன்று வார்த்தைகள் சொல்ல வைக்கிருரோ அவரே இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இது மிகவும் எளிதான போட்டியாகத் தோன்றலாம். ஆனல் திரைமறைவிலே அமரும் பெண் திருவுளச் சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கப்போகும் பெண். அவளை இந்த மூன்று வார்த்தைகளைச் சொல்லும்படி வைப்பது நாமெல்லாம் எதிர்பார்ப்பது போல் அத்தனை சுலபமல்ல. போட்டி இன்னும் ஒரு நாழிகை நேரத்துக்குள் ஆரம்பமாகும்'' என்று கூறி மன்ருடியார் அமர்ந்தார்.

திரை கட்டப்படும் சமயத்திலே மூன்று ராஜவம்சத்துப் பெண்கள் ஒரு வரிசையாக வஸந்த மண்டபத்துக்குச் சென்ருர்கள். அங்கே குந்தவியும் அவள் வயதுள்ள சேனதிபதியின் குமாரத்தியும் இருந்தார்கள். அரண்மனையைச் சேர்ந்த குலகுரு ஒருவர் அவர்களு

டைய பெயர்களைத் தனித்தனியே ஓலை நறுக்குகளில் எழுதிக்கொண்டார். பிறகு எல்லாவற்றையும் குலுக்கிப் போட்டு ஒரு குழந்தையை விட்டு ஏதாவது ஒன்றைப் பொறுக்கச் சொன்னார்.

என்ன ஆச்சரியம்! குழந்தை எடுத்த சீட்டில் குந்தவியின் பெயர் தான் இருந்தது. மற்ற ஓலை நறுக்குகளையெல்லாம் எடுத்துக் கிழித்து எறிந்துவிட்டு, குந்தவியைச் சர்வாலங்காரத்துடன் வரும்படியாகக் கூறி அவளை அலங்கார மாளிகைக்கு அனுப்பினர். இரண்டு சேடியர் சற்று நேரத்திலே பூரண சந்திரனைப் போல் ஒளி வீசும் அழகு வாய்ந்த குந்தவியை அழைத்துத் திரைக்குப் பின்னே அமரச் செய்தார்கள். ராஜவம்சத்தைச் சேர்ந்த ஸ்திரீகளில் சிலரையும் இரண்டொரு சேடிகளையும் தவிர திரை மறைவில் உட்கார்ந்திருப்பது யார் என்று ஒருவருக்கும் தெரியாமல் இருந்தது.

போட்டி நடைபெறும் இடத்திலே திரைக்கு எதிரே எதிரும் புதிருமாக இரண்டு ஆசனங்கள் போடப்பட்டன. ராஜகுமாரர் இருவரும் இரண்டு புறத்திலும் உட்கார ஏற்பாடு ஆகியது. உடனே மன்னுடியார் இருவரையும் திரை மறைவில் அமர்ந்துள்ள பெண்ணை ஒரு முறை பார்த்துவிட்டு வந்துவிடும்படி கேட்டுக்கொண்டார். இருவரும் அவ்வாறே சென்று பார்த்துவிட்டுத் தம் தம் ஆசனங்களிலே வந்து உட்கார்ந்துகொண்டார்கள்.

மணி ஒலித்தது.

சகோதரர்கள் இருவரும் மிகுந்த தர்மசங்கடமான நிலையில் தவித்தார்கள். எத்தனையோ விதமான போட்டிகளைப் பார்த்துவிட்டார்கள் அவர்கள். எத்தனையோ விதமான சாகஸங்களை யெல்லாம் செய்து பார்த்தும் இருக்கிறார்கள். ஆனால் ஓர் இளம் பெண்ணின் எதிரே வாயைத் திறந்து என்ன பேசுவது என்றே அவர்களுக்கு இப்போது புரியவில்லை. வாயை அசைத்துப் பேசவே முடியவில்லை. என்ன கேள்வி கேட்பது, என்ன பதிலை எதிர்பார்ப்பது, அதுவும் இத்தனை ஆயிரம் ஆண்-பெண்கள் கூடியுள்ள இந்த மகாசபையின் முன்னே எப்படி ஒரு பெண்ணிடம் கூச்சமின்றிப் பேசுவது என்றெல்லாம் கலங்கியபடி உட்கார்ந்திருந்தார்கள். சபையில் ஊசி விழுந்தால் அதன் ஓசை கேட்கும் அத்தனை நிச்சப்தம் நிலவியது.

நேரமோ போய்க்கொண்டேயிருந்தது. வயதான ஒரு பெரியவர் சகோதரர்களுடைய தயக்கத்தைக் கண்டு எழுந்து முன்னே வந்தார்.

''இந்தப் போட்டியும் ஒரு போட்டியா, மிகவும் சுலபமாயிற்றே என்று முதலில் எண்ணினேன். ஆனால் இப்போதல்லவா தெரிகிறது, இது எவ்வளவு சிரமமான போட்டி என்று! இன்று முழுவதும் உட்கார்ந்திருந்தாலும் உங்களில் யாராலும் இந்தப் போட்டியில் ஜயிக்க முடியுமா என்பது சந்தேகம்தான். ஒரு பெண், சரி, சம்மதம், சந்தோஷம்' என்று சொல்லவேண்டுமானால் நீங்கள் என்ன கேட்கவேண்டுமோ அப்படிப்பட்ட கேள்விகளாகக் கேளுங்கள்!'' என்றார்.

மீண்டும் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

ஆனால் ஜனங்களுடைய பொறுமையை எத்தனை நேரம்தான் சோதிக்க முடியும்? கசமுசவென்று சபையிலே பேச்செழுந்தது. அவர்களுடைய அமைதியின்மையை உணர்ந்துகொண்ட விமலன், திரையைப் பார்த்துப் பேசத் தொடங்கினான். (தொடரும்)

ஜோஸ்யர் நரியார்

ராஜி

ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அந்த நரிக்கு ஒரு மனைவியும் ஐந்து குட்டிகளும் இருந்தன. நரி தான் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் தன் மனைவியிடமே கொடுத்து விடுவது வழக்கம். தனக்கென்று பணம் வைத்துக் கொள்ளுவது அதற்கு வழக்கமே இல்லை. பொங்கல் நாள் நெருங்கவே அதன் மனைவி தனக்கும் நரிக்கும் தனது குட்டிகளுக்கும் புது வஸ்திரங்கள் வாங்கவேண்டும் என்று பிரியப்பட்டது. தன் விருப்பத்தை நரியிடம் தெரிவித்து அதற்காகக் குறைந்தது நாற்பது அல்லது நாற்பத்தைந்து ரூபாய் கொடுக்கும்படி கேட்டது. இதைக் கேட்ட நரிக்குக் கோபம் வந்தது. ''என்ன இது, என்னைப் பணம் கேட்கிறாய். என்னிடம் ஒரு காலணாக்கூட இல்லை என்பது உனக்குத் தெரியும். எல்லாப் பணத்தையும் உன்னிடம் தானே நான் கொடுத்து விடுகிறேன். நீ சேர்த்து வைத்து இருக்கும் பணத்திலிருந்துதான் பொங்கலுக்குச் செலவழிக்கவேண்டும்'' என்று சற்றுக் கோபமாகச் சொல்லிற்று.

''நீங்கள் சொல்லுவது மிகவும் நன்றாக இருக்கிறது. நீங்கள் கொடுக்கும் பணம் செலவுக்கே எனக்குப் போதவில்லை. என்னிடத்தில் செல்லாக் காசுகூடக் கிடையாது'' என்று பதில் சொல்லிற்று. இதைக் கேட்டவுடன் நரிக்குக் கோபம் வந்தது. ''உன்னிடத்தில் பணம் இல்லையா? என்னிடம் நீ பொய்யா சொல்லுகிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக வெளியே சென்றது.

அன்றுமுதல் நரி தன் மனைவியிடம் சரியாகப் பேசுவதில்லை. மனைவி ஏதாவது கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவதும் கிடையாது. வீட்டில் தங்குவதெல்லாம் சிறிது நேரமே. சிலநாள் வீட்டுக்கும் வருவது கிடையாது. வந்தாலும் தன் மனைவியிடம் பேசுவது கிடையாது.

தன் புருஷனின் திடீர் மாறுதலைக் கண்டு நரியின் மனைவி வருத்தப்பட்டது. அழுது அழுது அதனுடைய கண்களெல்லாம் சிவந்தன. ஆனால் நரி ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. தன் மனைவியிடம் பேசாமலே காலங்கழித்து வந்தது. நரியின் மனைவி வருத்தமடைந்து பக்கத்து வீட்டில் வசிக்கும் நாயிடம் தன் குறையைச் சொல்லி வருத்தப்பட்டது. நாய் நரியின் மனைவியைச் சமாதானப்படுத்தியது. ''உனக்கு இனிமேல் கவலை வேண்டாம். இந்தக் காட்டில் பாழடைந்த மண்டபத்திற்குப் பக்கத்தில் உங்கள் இனத்தைச் சேர்ந்த நரியார் ஜோஸ்யம் சொல்லுகிறார். மந்திரித்து விபூதி வேறு கொடுக்கிறாராம். ஒவ்வொரு குடும்பத்திலும் நடந்த சமாசாரங்கள், நடக்கப் போகும் சமாசாரங்கள் யாவற்றையும் அப்படியே சொல்லுகிறாராம். இன்று மத்தியானம் உன்னை நான் அங்கு அழைத்துப் போகிறேன்'' என்று சொல்லியது நாய். நரியின் மனைவி சரி என்று ஒப்புக்கொண்டது.

அன்று மத்தியானம் நரியின் மனைவியை அழைத்துக்கொண்டு ஜோஸ்யர் நரியாரிடம் நாய் சென்றது. அங்கே ஒரு பெரிய ஆலமரத்தடியில் பட்டை பட்டையாக விபூதியை அணிந்துகொண்டு கழுத்திலும் உடம்பிலும் ருத்திராக்ஷங்

களை அணிந்துகொண்டு தலைப் பாகையுடன் ஜோஸ்ய நரியார் உட்கார்ந்துகொண்டிருந்தது. அதன் முகத்தில் மூக்குக் கண்ணாடி இருந்தது. பக்கத்தில் தடியும் கமண்டலமும் இருந்தன. ஜோஸ்ய நரியாரைப் பார்ப்பதற்குக் காட்டிலுள்ள மிருகங்கள் க்யூ வரிசையில் நின்றுகொண்டிருந்தன.

நாயும் நரியின் மனைவியும் அங்கே நின்றுகொண்டு என்ன நடக்கிறது என்று வேடிக்கை பார்த்த வண்ணமாக இருந்தன. அப்பொழுது ஒரு புலி நரியாரிடம் ஜோஸ்யம் கேட்டது. ஜோஸ்ய நரியார் தன் கமண்டலத்தினால் புலியை ஒருதரம் தடவிக்கொடுத்து ஒரு பெரிய வஸ்திரத்தினால் ஐந்து நிமிஷ நேரம் தன்னை நன்றாக மூடிக்கொண்டது. பிறகு எழுந்து நின்று, ''ஏ புலியாரே, நீங்கள் வந்த காரணம் எனக்குத் தெரிந்துவிட்டது. உங்களது மனைவியின் வைர அட்டிகை நேற்று இரவு காணாமல் போனதைப் பற்றித்தானே?'' என்று சொன்னவுடன், ''ஆமாம் ஆமாம். ஆச்சரியமாக இருக்கிறதே, எப்படி அதற்குள் உமக்குத் தெரிந்தது?'' என்று ஆச்சரியத்துடன் புலி கேட்டது.

''புலியாரே, உங்கள் வைர அட்டிகை எங்கும் காணாமல் போகவில்லை. குளிக்கும் பொழுது உங்கள் மனைவி தோல் பெட்டியில் வைத்துவிட்டு ஞாபகமறதியாய்..'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஓட்டம் ஓட்டமாகத் தன் வீட்டை நோக்கித் தன் மனைவியிடம் சென்றது. ''போதும், உன் ஞாபக மறதி. காட்டு ஜோஸ்ய நரியாருக்கும் தெரிந்திருக்கிறது. தோல் பெட்டியைத் திறந்து உன் வைர அட்டிகை இருக்கிறதா என்று பார்'' என்று சொன்னவுடன், ''ஆமாம், ஆமாம். இப்பொழுது தான் ஞாபகம் வருகிறது'' என்று பெண்புலி, தோல் பெட்டியிலிருந்து வைர அட்டிகையை எடுத்தது. பிறகு இரண்டு புலிகளும் ஓடோடியும் சென்று ஜோஸ்ய நரியாரை நமஸ்கரித்து அதன் முன்னிலையில் வெள்ளி நாணயங்களைக் கொண்டு வைத்தது.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த நரியின் மனைவி, கூட்டம் கலைந்தவுடன் மெதுவாக நாயுடன் ஜோஸ்ய நரியாரை நெருங்கிற்று. ஜோஸ்ய நரி, நரியின் மனைவியை இப்படியும் அப்படியுமாக ஏற இறங்கப் பார்த்தது. பிறகு ஒரு பெரிய வஸ்திரத்தினால் தன்னை ஐந்து நிமிஷ நேரம் மூடிக்கொண்டது. பிறகு தனது கமண்டலத்தினால் நரியின் மனைவியைத் தடவிக் கொடுத்தது. நீ இங்கு வந்த காரணம் தெரிந்துவிட்டது. உன்னிடம் பணத்தை வைத்துக்கொண்டு, இல்லை என்று உன்னையே நம்பி இருந்த கணவனிடம், பொய் சொல்லியதால் அவன் உன்மீது வெறுப்புக் கொண்டு உன்னிடம் பேசாமலும் வீட்டுக்குச் சரிவர வராமலும் இருக்கிறான், இல்லையா? மனைவி இப்படி நடந்துகொண்டால் எந்தக் கணவன்தான் பொறுத்துக்கொள்வான்?'' என்றது. உடனே நரியா

ரின் மனைவி நமஸ்கரித்து, "ஐயா, இனிமேல் என் புருஷனிடம் சரிவர நடந்து கொள்கிறேன். இப்பொழுது எப்படியாவது என் கணவர் எப்பொழுதும் போல என்மீது பிரியமாக நடந்துகொள்ளும்படிச்செய்யுங்கள்" என்றது. "சரி, அது மிகவும் சிரமமான காரியம். எப்பொழுதும் பிரியமாக இருக்கும் கணவன் திடீர் என்று கோபித்துக் கொண்டால், கணவனைச் சமாதானப் படுத்துவது எளிதில் முடிகிற காரியமல்ல. இருந்தாலும் உனக்கு உதவி செய்கிறேன். எனக்குக் காணிக்கையாக ஐம்பது ரூபாய் கொடுத்தால் நான் வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்கிறேன்" என்று ஜோஸ்ய நரி சொன்னது. அதைக்கேட்ட மனைவி, "உமக்கு மிகவும் வந்தனம், உங்கள் காணிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று தன்னிடம் கொண்டு வந்த பணத்திலிருந்து ஐம்பது ரூபாயை ஜோஸ்ய நரியின் எதிரில் வைத்தது.

"இந்தா, இந்தப் பொட்டலத்தில் இருப்பது நான் மடியாக ஜபித்து வைத்திருக்கும் விபூதி. இந்த விபூதியை இப்பொழுதே நீ வீடு சென்று உன் புருஷன் படுக்கும் அறையில் தூவிவிடு. வேறு ஒருவரும் பிறகு அந்த அறைக்குப் போக வேண்டாம். உன் புருஷன் வந்து அந்த அறையில் படுத்த அரை மணி நேரத்திற்கெல்லாம் அங்கே போனால் என் மந்திர விபூதியின் சக்தியினால் உன்னைச் சந்தோஷமாக வரவேற்பான்" என்றது. நரியின் மனைவி சந்தோஷமாக நாயுடன் வீடு சென்றது. ஜோஸ்ய நரியார் சொல்லியபடி நரி படுத்துக்கொள்ளும் அறையை நன்றாகச் சுத்தம் செய்து மந்திர விபூதியைத் தெளித்துவிட்டது.

அன்று இரவு நரி வழக்கம்போல வந்து மனைவியுடன் பேசாமல் நேராகத் தன் அறையில் போய்ப் படுத்துக்கொண்டது. அது படுத்துக்கொண்ட அரைமணி நேரத்திற்கெல்லாம் நரியின் மனைவி மெதுவாக நரியின் அறைக்குச் சென்றது. அப்பொழுது அங்கு நரியைக் காணவில்லை. அதற்குப் பதிலாக ஜோஸ்ய நரியார் உட்கார்ந்திருந்

ஜோஸியன்: உங்க லக்னத்திலே சந்திரன் பார்வை பூர்ணமாயிருக்கு: உங்க தொழில்லே ஜயமெல்லாம் அவன் பார்வையாலேதான்! என்ன நான் சொல்றது?

திருடன்: இருக்காதுங்களே! அவனாலேதானே நம்ம தொழிலே பாதி நாளைக்குச் சரியா நடக்கமாட்டேங்குது.

—தே. பார்த்தசாரதி, மயிலாப்பூர்.



தது. "யார் இந்த உள்ளே இருப்பது?" என்று நடுங்கிய குரலுடன் நரியின் மனைவி கத்திற்று.

"நான்தான் உன் கணவன்!" என்று நரியின் மனைவி ஆச்சரியப்படும்படி தன் ஜோஸ்ய வேஷத்தைக் கலைத்தது. "வா என்னருகில், உனக்குப் பாடம் கற்பிக்கவே ஜோஸ்ய வேஷம் பூண்டு உன்னிடமிருந்து பணம் வாங்கினேன். பொங்கலுக்குத் துணிமணிகள் வாங்குவதற்கு உன்னிடம் நாற்பத்து ஐந்துரூபாய் இல்லை என்று சொல்லிவிட்டு ஜோஸ்யருக்குப் பாத காணிக்கையாகக் கொடுப்பதற்கு மாத்திரம் உன்னிடம் எங்கிருந்து ஐம்பது ரூபாய் இருந்தது? இந்தா, நீ கொடுத்த ஐம்பது ரூபாய்!" என்று நரியார், மனைவி கொடுத்த அதே ரூபாய்களைத் திருப்பிக்கொடுத்தது. நரியின் மனைவி வெட்கத்தினால் தலைகுனிந்தது. நான் இனிமேல் உங்கள் இஷ்டப்படியே நடப்பேன்" என்று வாக்குறுதி செய்தது.

"நீங்கள் ஜோஸ்யர்மாதிரி வேஷம் போட்டதும் உங்கள் கியாதி காடெங்கும் பரவிவிட்டது. அதெப்படி நீங்கள் புலியார் விஷயத்தில் அவ்வளவு சரியாக ஜோஸ்யம் சொன்னீர்கள்?" என்று கேட்டது. "அதுவும் ஒரு சூழ்ச்சிதான். உன்மீது கோபித்துக் கொண்ட அன்றைத் தினம்முதல் ஜோஸ்யனைப் போல நடித்தேன். பல எலிகளை என்னிடம் வேலைக்கு அமர்த்திக்கொண்டேன். எலிகள் எல்லாம் ஒவ்வொரு வீடு சென்று ரகசியங்களை அறிந்து கொண்டு வரும். யாராவது ஜோஸ்யத்திற்கு வந்து என்னைக் கேட்க வந்தால், நான் வெள்ளைத் துணியால் போர்த்திக் கொள்வேன். அப்பொழுது சம்பந்தப்பட்ட எலி ரகசியமாக என் காதில் வந்து விஷயத்தைச் சொல்லும். அதை வைத்துக் கொண்டு நான் ஜோஸ்யத்தில் கரை கண்டது போல் பாவனை செய்வேன். அவ்வளவுதான். அதுவும் இந்தப் புலியாரின் விஷயத்தில் வேண்டுமென்றே அலமாரியில் வைத்திருந்த வைர அட்டிகையை எலிகளின் உதவியால் தோல்பெட்டியில் வைக்க ஏற்பாடு செய்தேன். நான் அப்படிச் செய்யாவிட்டால் நம்மிடம் ரூபாய் கடன் வாங்கிவிட்டுக் கொடுக்காமல் இருந்து வரும் புலியாரிடம் எப்படி நான் நூறு ரூபாயைத் திருப்பிப் பெறமுடியும்?" என்றது. அதைக் கேட்ட நரியின் மனைவி தன் கணவனுடைய சாமர்த்தியத்தை மெச்சியது. அந்த வருஷப் பொங்கல் திருநாளை மிகவும் விமரிசையாக நரியும் அதன் மனைவியும், நரிக்குட்டிகளும் கொண்டாடின.

வயிற்றுப் பானை!



பொங்கலோ பொங்கல்!

என். ராமகிருஷ்ணா

நம் தமிழ் நாட்டில் நமக்குப் பொங்கலைவிடப் பெரிய பண்டிகையும் உண்டோ? ஏன்? பொங்கலின்போதுதான் நமக்கு புது நெல் அறுவடை யாகிறது. மக்களுக்கு முக்கியமானது உணவு. அந்த உணவை நாம் அன்னை பூமியின் அருளினால் அடைகிறோம். அதனால்தான் எல்லாப் பண்டிகைகளையும்விடப் பொங்கல் திருநாளை நாம் பெருநாளாகக் கருதுகிறோம்.

இந்தப் பண்டிகையை இந்தியாவில் பல இடங்களில் 'ஏன், எல்லா இடங்களிலும் கொண்டாடுகிறார்கள். ஆனால் பல பெயர்கள் இட்டு அழைக்கிறார்கள். முக்கியமாக எல்லோராலும் சங்கராந்தி என்று இந்தப் பண்டிகை அழைக்கப்படுகிறது.

நகரங்களிலிருந்துகொண்டு பொங்கல் திருநாளின் வைபவத்தை முற்றும் சுவைக்க நம்மால் முடியாது. அதற்குக் கிராமத்துக்குச் செல்லவேண்டும். உங்களில் எவ்வளவு பேர் கிராமம் சென்று இதை அநுபவித்திருப்பீர்கள்? கிராமத்திலேயே வாழும் குழந்தைகளைக் கண்டு மற்றவர்கள் இந்த விஷயத்தில் பொறாமைப் படத்தான் வேண்டும்.

பொங்கலுக்குச் சில நாட்களுக்கு முன்பே வீடுகளையெல்லாம் சுண்ணாம்பு அடித்து ஒட்டடை நீக்கிச் சுத்தம் செய்வார்கள். வருடந்தோறும் சுதந்தரமாக மூலைமுடுக்குகளில் படிந்திருக்கும் ஒட்டடைக்கு விமோசனம் பிறக்கும். கதவு ஜன்னல்கள் துடைக்கப்பட்டு வர்ணம் பூசப்படும்.

குடிசைகளில் வாழும் மக்கள் தங்கள் உணவைச் சமைப்பதற்கு மண்பாண்டங்கள் உபயோகப்படுத்துவார்கள். பொங்கலன்று இப்பழைய பானைகள் அகற்றப்பட்டு, புதுப்பானைகளில் உணவு சமைக்கப்படும். அன்ன லக்ஷ்மியும் ஐசுவரிய லக்ஷ்மியும் அன்று வீட்டினுள் பிரவேசிப்பதாகக் கருதப்படுகிறது.

பொங்கல் என்றால் பெண்மணிகளுக்குத்தான் வேலை அதிகம். வீட்டுக்குச் செம்மண் பட்டை அடிக்க வேண்டும். அழகாகக் கோலம் போடவேண்டும். மற்றும் எத்தனையோ சிங்காரங்கள் செய்ய வேண்டும். மார்கழி மாதத்தில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? தினமும் காலையில் வீட்டின் முன்புறம் பறங்கி அல்லது பூசணிப் பூவை, சாணி உருண்டையில் செருகி வைக்கிறார்கள். இவைகள் அன்றாடம் விராட்டியாகத் தட்டப்படும். இப்படித் தயாரான விராட்டிகளையே பொங்கலன்று சமைப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். விடிவதற்கு முன்பே மக்கள் எழுந்து தம் தம் வேலையைச்

பெயர் பொருத்தம்

சுறு சுறுப்புடன் கவனிப்பார்கள்.

பொங்கல் வடநாட்டிலும் கொண்டாடப்படுகிறது. குஜராத்திலும், வங்காளத்திலும், மஹாராஷ்டிரத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் பம்பாயிலும் பொங்கல் பண்டிகையை மக்கள் வரவேற்கிறார்கள். '**மகர சங்கராந்தி**' என்று பெயர் சொல்கிறார்கள். சூர்ய பூஜை செய்கிறார்கள். மகர சங்கராந்தி அன்றுதான் சூரியன் உத்தராயணம் செல்கிறான். அப்பொழுது பிரயாகையிலும், திரிவேணி சங்கமத்திலும் திரளான மக்கள் கூடி ஸ்நானம் செய்வார்கள். அலகாபாத்திலும் மற்ற இடங்களிலும் '**மேளா**' உற்சவம் கொண்டாடுகிறார்கள். கங்கையில் மக்கள் ஸ்நானம் செய்வார்கள். பம்பாயில் குழந்தைகள் பட்டம் விட்டு இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

மஹாராஷ்டிர தேசத்தில் இந்தப் பண்டிகையைப் பெண்களே பிரமாதமாகக் கொண்டாடுகிறார்கள். பெண்கள் அண்டை அயலார் வீடுகளுக்குச் சென்று வாழ்த்தி விசாரிக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில்தான் இது ஆண், பெண் எல்லோராலும் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் என்றால் பொங்குதல் என்று அர்த்தம். பாலும் அரிசியும் கலந்து பொங்கி மக்களுக்கு இனிப்பூட்டுவதால் அந்தப் பெயர் வந்தது.

குளிர்காலம் சென்று '**சுள்**' என்று கதிரவன் ஒளி மக்கள் மீது படுகிறது. கிராமவாசி ஒரு வருடத்திற்கு வேண்டிய தானியத்தைச் சேகரித்துச் சேமித்து வைக்கிறான். குழந்தைகள் கரும்பைச் சுவைத்துப் பெருமிதம் அடைகின்றனர். அட்டைப்படத்தில் உள்ள குழந்தைகளின் முகத்திலுள்ள சந்தோஷத்தைப் பாருங்கள்.

கிராமவாசிக்குத் தன் குடும்பத்தினுள் ஒன்றாகக் கருதப்படுவது அவனுடைய கால் நடைகள். மாடுகளும் எருதுகளும் கன்றுகளுமே தான் அவனுடைய சொத்து சுதந்தரம் எல்லாம். பொங்கலன்று அவைகளையும் கவனிக்க வேண்டுமல்லவா? அதனால் மாட்டுப் பொங்கலையும் பெருமையாகக் கொண்டாடுகிறார்கள் கிராமவாசிகள்.

மாட்டுப் பொங்கல் அன்று கால் நடைகள் குளிப்பாட்டப்படுகின்றன. அவைகளுடைய கொம்புகளை முன்பே அழகாகச் சீவி வர்ணம் பூசுகிறார்கள். கழுத்தைச் சுற்றி வண்ண மணிகள் கட்டுகிறார்கள். நெட்டி மாலைகளால் அலங்கரிக்கிறார்கள். பசுக்களைத் தெய்வமாக எண்ணிப் பூஜையும் செய்கிறார்கள். மஞ்சள், குங்குமம் இட்டு அவைகள் சுதந்தரமாக விடப்படுகின்றன. பொங்கல் பிரசாதம் அவைகளுக்கும் உண்டு.

மாலையில் '**மாட்டுப் பந்தயம்**' '**ஜல்லிக் கட்டு**' முதலிய புராதன விளையாட்டுகள் நடத்தப்படுகின்றன. வலிமை வாய்ந்த இளைஞர்கள் இதில் கலந்து கொண்டு துள்ளி வரும் மாடுகளைப் பிடித்து அடக்கி, அவைகளின் கொம்புகளிலுள்ள பரிசை அடைவார்கள்: பிரபல மிராசுதார்கள் அவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பார்கள். மாடுகள் நம் காமதேனு அல்லவா?

எங்கள் பகுதி

★

கற்பனையில் கண்ட விமரிசன கடிதம்

சி. டி. ராசன், திருவிழந்தூர்:

''அருமையான சம்பவம்'' எப்படி?

'உண்மையில் நடந்த உணர்ச்சியான' சம்பவமாக இருந்தால் தான் பிரசுரிப்பேன் என்று முதலில் கூறினேன். ஆனால் எழுதுவோரில் பெருவாரியாகக் 'கற்பனையை'க் கலப்பதால் இப்பகுதிக்கு..!

கே. கே. ராமன்:

''மின்னியது'' மின்னுகிறதா?

ஓ! மின்னுமே! வீண் வளர்த்தல் இல்லாவிட்டால்!

ரா. ஆறுமுகம்:

என் கதை இனிக்கிறதா?

இனிக்கும். ஆனல் இப்பத்திரிகையில் அல்ல! வேறு பத்திரிகையில் பிரசுரித்திருந்தால்!

எஸ். ரங்கநாயகி;

''டுவீட் கோட்டு'' சரியாக இருந்ததா?

கொஞ்சம் பெரிதாகப் பார்ப்போருக்குத் தெரியும்! எனக்கல்ல!

ரங்கன்:

''வீண் பயம்'' பற்றி விளம்புங்கள்.

''வீண் சிரமத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்கள்'' என்பதைத் தவிர வேறு என்ன விளம்ப இருக்கிறது!

நீலம்:

''எப்போது விடுவார்கள்?'' எவ்வாறுள்ளது?

சிறந்த கதை என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறோம்.

எங்கள் நிலையையும், பட்டமளிப்பு விழாவையும் விளக்கவும். (அ) தூங்கும் அழகி; (ஆ) லீடர் மணி; (இ) சந்திரகிரிக்கோட்டை; (ஈ) கேளுங்கள்-பதில் சொல்லுகிறேன்; (உ) எங்கள் பகுதி; (ஊ) பாலர் கவி அரங்கம்

நேயர்களின் விருப்பப்படி கீழ்க்கண்ட பட்டங்களைச் சூட்டுகிறேன். (அ) ''சிந்தனையான முடிவு.'' (ஆ) ''எழுத்தில் ஏற்றம் காண்பித்த தமிழோவியம்.'' (இ) ''சரித்திரக் கற்பனையில் புகுந்த புதிய சகாப்தம்'' (ஈ) ''விஞ்ஞான விருந்து'' (உ) ''விமர்சன வேட்டை'' (ஊ) ''காலத்திற்கேற்ற கவிதை.''

நீங்கள் நன்றாகப் பண்பு போதிக்கிறீர்களே! அந்த ரகசியத்தை ....சொல்லவேமாட்டேன்!

M. A. பாலசுப்ரமணியன், திருச்சி.

* ரூ. 5 பரிசு பெற்ற கடிதம்.

சுமலம்

''கண்ணன்'' தினமும் வந்து எங்கள் சோர்ந்த உள்ளங்களுக்குப் புத்துயிர் அளிக்கமாட்டானா!

அட்டையில் வெகு நன்றாகக் கார்த்திகையின் கோலாகலத்தை வரைந்துள்ளார்.

''ஆர்வி'' எழுதும் ''லீடர் மணி''யை வர்ணிக்க, ஆயிரம் நாவு படைத்தாலும் முடியாது.

''பேராசிரியர் விஞ்ஞானம்'' கூறும் விஷயங்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிகின்றன. ''சந்தரகிரிக்கோட்டை'' அருமை.

''தூங்கும் அழகி''யின் முடிவு எதிர்பார்த்ததே.

''மின்னியது'' சுவாரஸ்ய மிக்க கதை.

''தங்கப் பதுமை'' எங்களுக்கு ஏற்றதாக இல்லை.

''எப்பொழுது விடுவார்கள்?'' உட்பொருள் மிகவும் சொல்பம்.

''ட்வீட் கோட்'' என்ற நாடகம் பாராட்டத் தக்கது.

''வீண்பயம்'' எங்கள் பயத்தையும் அகற்றியது.

''பாலர் கவி அரங்கம்'' உணர்ச்சியை உண்டாக்குகிறது.

சூரியனைக்கண்ட கமலம்போல் சிறுவர் உள்ளம் மலர்கிறது.

பி. எஸ். ஜி. சங்கரன். புதுடில்லி.

விமரிசனம்:

நான் இந்த இதழுக்கு விமரிசனம் எழுது முன் விமரிசனர்களுக்கு ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்:-

விமரிசனம் எழுதுவதே, பரிசை வாங்குவதற்குத்தான் என்ற எண்ணம் வாசகர்களின் மனத்தில் இருக்கும் வரை, உண்மையான விமரிசனம் ஒரு பொழுதும் எழுத முடியாது. இது நிச்சயம். எந்த விதமான கதையையும் (அது நன்றாக இல்லையென்றால் கூட) நன்றாக இருக்கிறது என்று தலையில் வைத்துக் கூத்தாடினால்தான், ஆசிரியரின் மனத்தைக் கவர்ந்து பரிசைத் தட்டிக்கொண்டு போக முடியும் என்ற எண்ணமும் விமரிசனர்களின் மனத்தை விட்டு அகல வேண்டும். பொதுவாக ஆசிரியர் நன்றாக இல்லாத கதைகளைப் பிரசுரிப்பதில்லை. இருந்தாலும் எது உண்மையில் பிடித்தது, பிடிக்க வில்லை என்பதைத் தைரியமாக விட்டுத் தெரிவிக்க வேண்டும்.

உதாரணமாக, சில நாட்களுக்கு முன்பு என் நண்பன் ஒருவன் ஒரு கண்ணன் இதழுக்கு விமரிசனம் எழுதி அனுப்பினான். அந்த விமரிசனத்திற்கு அவனுக்குப் பரிசு கிடைக்கவில்லை.

அதற்காக அவன் என்ன சொன்னான் தெரியுமா? ''நான் இவ்வளவு நல்ல நடையில் விமரிசனம் எழுதியும் எனக்குப் பரிசு கொடுக்காமல், ஏதோ ஒரு குக்கிராமத்தில் உள்ள ஒரு மடையனுக்கு அல்லவா ஆசிரியர் பரிசு கொடுத்து இருக்கிறார்'' என்றான்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இவன், உண்மையான ஆர்வத்துடன் 'விமரிசனம்' எழுத வில்லை என்றும், பரிசுக்காகவே மட்டும் எழுதியிருக்கிறான் என்றும் புலனாகிறது. நான் இந்த மாதிரி விமரிசனம் எழுதியதிலிருந்து, ''ஓஹோ'' இவனும் உண்மையில் பரிசைத் தட்டிக்கொண்டு போகத் தான் இந்த வழி செய்கிறான் என்று எண்ணி விடாதீர்கள். நான் பரிசுக்காக எழுத வில்லை என்பதற்கு ருசு வேண்டுமோ?

L. R. **பஞ்சாபகேசன்,**
ஹைதராபாத்.

க்விஸ் விடைகள்

1. ராமேசுவரம்.
2. பழனி.
3. பிர்லா மந்திர்.
4. மைசூர் செயிண்ட் பிலோமினா.
5. வண்ணாத்திப் பூச்சி.
6. கல் வாழை.
7. தென்னங் குரும்பை.
8. கடல் நுரை.

விடை: உனக்குத் தெரியுமா?
1881-ஆம் வருஷம்.

கண்ணனின் பண்

கண்ணன் என்றொரு இதழ் உண்டு
தனியே அதற்கொரு மணம் உண்டு
அமுதமே அதனது தமிழ்க் கதை [யாம்
அன்பே அதனது அறவழியாம்...
கலைகள் யாவும் கற்றிடலாம்
கற்றவர் யாவரும் மகிழ்ந்திடலாம்
நிலைகொள் பற்பல தனிச் சிறப்பும்
நின்றன என்றும் உடையனவாம்
கதைகள் யாவும் படித்திடலாம்
தமிழின் உயர்வை அறிந்திடலாம்
உள்ளத்தில் எழும் கேள்விக்கு
உன்னதமாகப் பதில் அளிக்கும்...
ஆர்ட் காகித அட்டைதனில்
அழகாய் ஓவியர் வரைந்திட்டார்
அன்பு தவழும் முகத்துடனே
அழகாய்த் தத்தித் தவழுகிறான்..
கண்ணன் பிறந்தது மதுரையினில்
நம் கண்ணன் பிறந்தது மதராசில்
மாதம் இரு முறை என் கையில்
மாண்புடன் தவழும் கண்ணனிதழ்,

—M. V. **ஆச்சால், வந்தவாசி.**

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

செய்திகள்

கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகள்

டாக்காவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் முதல் டெஸ்ட் மாட்சு நடைபெற்றது. இந்த டெஸ்ட் 'டிரா'வாகிவிட்டது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 257 ரன்களும், இந்தியா முதல் இன்னிங்ஸில் 148 ரன்களும் எடுத்திருந்தன. இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் 158 ரன்களே எடுத்திருந்தன. இந்தியா கடைசி நாள் ஆட்டத்தில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 146 ரன்கள் எடுத்துவிட்டன. ஆனால் ஆட்டம் அதற்குள் முடிவு பெற்றுவிட்டது. இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் கட்சியின் சரிவுக்குப் பெரும்பாலும் குப்தேயின் அற்புதமான பந்து வீச்சே காரணமாகும். அவர் ஆறே ஓவர்களில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திவிட்டார்.

ஆஸ்திரேலியாவுக்கும் எம். ஸி. ஸி. க்கும் மெல்போர்னில் மூன்றாவது டெஸ்ட் மாட்சு நடைபெற்றது. முதலில் ஆடிய இங்கிலாந்து 191 ரன்களே எடுத்தது. கௌட்ரி சென்சரி போட்டிருக்கா விட்டால் இதுவும் கிடைத்திருக்காது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 231 ரன்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து நிமிர்ந்துவிட்டது. மேயும், ஹட்டனும் அற்புதமாகப் பந்துகளை அடித்து 279 ரன்கள் எடுத்து விட்டார்கள். ஆஸ்திரேலியா நாலாவது நாள் கடைசியில் 75 ரன்கள் எடுத்தது. கடைசி நாள் ஆட்டத்தில் மொத்தம் 111 ரன்கள் எடுத்துத் தோற்றது.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்

புது வருஷத்துக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடைபெற்றது. முதன் முதலாக ஒரு ஹரிஜன் இந்த வருஷத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ பி. கக்கன் என்பது அவர் பெயர். இவர் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த தேச பக்தர்.

நேரு வருகிறார்

சென்னைக்கு நமது இந்தியப் பிரதம மந்திரி நேரு ஜனவரி மாதம் 15 - ஆம் தேதி வருகிறார். அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக முன்னதாகவே வருகிறார். ஜனவரி 24 - ஆம் தேதி அன்றுதான் டில்லி திரும்புகிறார்.

ஆவடி காங்கிரஸ்

ஆவடியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக்கான ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன. மகா சபையின் வரவேற்புக் கமிட்டிக்கு ஸ்ரீமதி அம்புஜம்மாள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் காலஞ்சென்ற காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் குமாரியாவார். காங்கிரஸ் சரித்திரத்திலேயே வரவேற்புக் கமிட்டிக்கு ஒரு ஸ்திரீயைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பது இதுதான் முதல் தடவை. மகாசபைக் கூட்டத்துக்காகச் சென்னையிலிருந்து 290 ஸ்பெஷல் பஸ்கள் விடப் போகிறார்களாம். சென்னையிலிருந்து நபர் ஒன்றுக்குக் கட்டணம் எட்டணா.

கால் பந்து

ரஷ்யாவிலிருந்து கால் பந்து கோஷ்டி ஒன்று இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறது. ஜனவரியில் இந்தியாவுக்கு வரும் இந்தக் கோஷ்டி, சென்னையில் அடுத்த மாத முதல் வாரத்தில் பந்தய மாட்சு விளையாடப் போகிறது.

புத்தகக் காட்சி

சென்னை, குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஐந்தாவது குழந்தைப் புத்தகக் காட்சி, திருவல்லிக்கேணி, கெல்லட் ஹைஸ்கூலில் ஜனவரி 13 - ஆம் தேதி மாலை ஆரம்பமாகிறது. 13, 14, 15 தேதிகளில காட்சி நடைபெறும். சினிமா, சிறுவர் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

Reg. No. M. 5542

உங்களை மறவாத உள்ளம் ஒன்று!

ஆங்கிலப் புது வருஷத்துடன்
பொங்கல் திருநாள் வருகிறது!
உங்கள் அருமைக் குழந்தைகளுக்கு
அன்புப் பரிசு தரவேண்டாமா?
மாமா தன் மருமக்களுக்குப் பரிசு தர
லாம்: அப்பா தம் நண்பர்கள் குழந்தைகளுக்
குப் பரிசு தரலாம்.
நாலே ரூபாயில் இதோ ஒரு சிறந்த பொங்கல்
பரிசு! கண்ணன் தீபாவளி மலர் உள்பட வருஷ
சந்தா ரூபாய் நாலுதான். இந்தப் பணத்தை
அவர்கள் பெயரில் சந்தா கட்டுவதே அந்தப்
பரிசு. கண்ணைப் பறிக்கும் 24 இதழ்களும் தீபா
வளி மலரும் உங்கள் வாழ்த்துடன் அவர்களைத்
தேடிச் செல்லும்.
கண்ணனை விரும்பாத குழந்தைகள் ஏது?
குழந்தைகளின் அபிமானப் பத்திரிகை; அறிஞர்
கள் பாராட்டும் பத்திரிகை.
புனித நாளில் ஒரு புனிதமான காரியம்!



என் பொங்கல் பரிசாகக் கண்ணனை
ஒரு வருஷம் அனுப்புங்கள்

(1) பெயர் ....
விலாசம் ....
....

(2) பெயர் ....
விலாசம் ....
....

இந்தப் பரிசு அனுப்புபவர்:
பெயர் ....
விலாசம் ....
....

மேற்கண்ட சந்தாவுக்காக ரூ. ......
மணியார்டர்/செக் மூலம் வருகிறது.